சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு மார்கழிமாதம் 1-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 47-ம் இலக்கம்

## மதஸ்தாபன பாடசாலைகளின் சங்காரத்திட்டம்

# நிறைவேற்றப்படுகின்றது

இன்று மார்கழி முதலாந் திகதி அரசாங்கத்தின் புதிய கல்விச்சட்டம் அமுல்நடத்தப்படுகின்றது. நேற்று மதஸ்தாபனங்களின் பொறுப்பிலிருந்த, ஒரு சில பாடசாலைகளைத்தவிர்ந்த மற்றெல்லாம் இன்று அரசாங்க பாடசாலைகளாய் மாறுகின்றன. அரசாங்க உதவியின்றித் தனித்தியங்கத் துணிந்துள்ள ஒரு சிலபாடசாலைகள் எவ்வளவு காலம் மதஸ்தாபன பாடசாலைகளாய் நீடித்தியங்க முடியுமோ தெரியாது. எனவே, இன்று தினத்தை மதஸ்தாபன பாடசாலைகளின் சங்காரதினம் என்று அழைப்பதில் எவ்வித தவறுமில்லை.

மதஸ்தாபனங்களுக்கு இது ஓர் பெருந்துக்கதினம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அரசாங்கத்தின் புதிய சட்டத்தினால் அதிகமாகப் பாதிக்கப்படுகிற கத்தோலிக்கமக்களாகிய எங்களுக்கு, இது ஓர் மாபெருந்துக்கதினமாகும். நூறு ஆண்டுகளாக எமது மூதாதையர் அரும்பாடுபட்டுக் கட்டியெழுப்பிய கல்விக்கூடங்கள் அநியாயமாய் எங்களிடமிருந்து பறிக்கப்படும்போது, நாம் துக்கதினம் கொண்டாடாமலிருக்க முடியுமா? கத்தோலிக்கமக்களின் நீதியான கோரிக்கைகளையும், ஆட்சேபனைகளையும் உதாசீனம் செய்து, எங்கள் பிள்ளைகளினதும், பெற்றோரினதும், மதத்தினதும் புனிதமான உரிமைகளுக்கு மாறாக அவசர அவசரமாக அரசாங்கம் ஓர் அநியாய சட்டத்தை இயற்றி, அதை அமுல் நடத்துவதை நினைக்கும்போது நாம் ஆழ்ந்தகவலைக்குள்ளாகுகின்றோம்.

இற்றைக்கு ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் ஏரோதன் என்னும் கொடுங்கோல் மன்னன் பச்சிளம்பாலரின் உடல்களைக் கொன்றுதான் வெற்றி பெற்றுவிட்டதாக எண்ணி மகிழ்ந்தான். ஆனால், உண்மையிலே தோல்வியே அடைந்தான். அவ்வாறே இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் விரோதிகளும் இன்று எங்கள் பாடசாலைகள் சங்காரம் செய்யப்படுவதினால் தாங்கள் வெற்றிபெற்றுவிட்டதாக எண்ணி மகிழக்கூடும். ஆனால், உண்மையில் ஏமாற்றமே அடைவார்கள்.

எங்கள் பாடசாலைகள் பறிபோய்விட்டாலும் எங்கள் திரவியங்களாகிய பிள்ளைகளை நாங்கள் பறிகொடுக்கப் போவதில்லை. அவர்களை நாஸ்திகத்தின் கொடிய வாளுக்கு இரையாக ஒருபோதும் கொடுக்கமாட்டோம். இது எமக்குப் பரீட்சிப்பின் காலம். வெற்றியின்காலம்விரைவில்வரும். அதை நாம் செபத்துடனும் பொறுமையுடனும், விசுவாசத்துடனும் காத்திருப்போம். "இவ்வுலகத்தில் உங்களுக்கு நெருக்கிடை உண்டாகும். ஆயினும் திடமாயிருங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்" (அரு. 16. 33) என்ற கிறிஸ்துபெருமானின் பொன்மொழிகளை நினைவுகூர்ந்து, உற்சாகமடைவோமாக. எங்கள் பாடசாலைகளுக்கு மீட்புக்கிடைக்கும்வரை மார்கழிமாதம் 1-ந்திகதி இலங்கைத்திருச்சபைச் சரித்திரத்திலே துக்கதினமாகவே அனுட்டிக்கப்பட்டு வரும்.

### கௌரவ பிரதம மந்திரி அவர்கள் கத்தோலிக்க மேற்றிராணிமாருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைப் பற்றிக் கத்தோலிக்க மேற்றிராணிமார்

## விடுத்த அறிக்கை

"கடந்த 24-ம்திகதி இரவு பிரதமமந்திரிஅவர்கள் கத்தோலிக்க மேற்றிராணிமாரை அடுத்தநாள் நடாத்தப்படவிருந்த மகாநாட்டிற் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

"25-ம்திகதி பிற்பகல் 9மணிக்கு ஆரம்பமாகி 26-ம் திகதி காலை 3மணியளவில் முடிவடைந்த நீண்ட பேச்சு வார்த்தைகளின் போது, உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கும் சட்டத்தினால் எழுந்துள்ள தற்கால நிலைபரம்பற்றி ஆராயப்பட்டது. புதிய நிர்வாகத்தின் கீழும் உதவிபெறும் பாடசாலைகள் நடைமுறையில் முன்னிருந்தது போலவே தொடர்ந்து நடாத்தப்படும் என்று பிரதமமந்திரி அவர்கள் வாக்குறுதிகூறினர். இன்னும், பாடசாலைகளைப் பற்றிய இரண்டாவது மசோதா பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமுன் ஓர் விசாரணைக் குழு நியமிக்கப்படும் என்றும், அவ்விசாரணைக்குழு மதஸ்தாபனங்களின் கோரிக்கைகளுக்குத் தகுந்தகவனஞ் செலுத்துமென்றும் அவர் வாக்குறுதி கூறினர்.

"பாடசாலைகளைப்பொறுப்பேற்கும் முழுத்திட்டத்தையும் புனராலோசனை செய்யுமாறு அரசாங்கத்தைத் தூண்டுவதற்கு இது எங்களுக்கு ஓர் சந்தர்ப்பத்தை அளித்ததால், 1960-ம்ஆண்டு மார்கழிமாதம் 1-ம்திகதி நடைபெற இருக்கும் நிர்வாக மாற்றத்திற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்குமாறு விசுவாசிகளைக் கேட்டுக்கொள்ள மேற்றிராணிமார் ஒப்புக்கொண்டனர்.

"எனினும், புதிய சட்டத்தில் எங்களைப் பாதிக்கும் அம்சங்களுக்கு எதிராக, சகலநியாயமான முறைகளைத் தழுவி ஆட்சேபனை தெரிவிக்க எங்களுக்குரிமை உண்டென்பதை நாங்கள் வற்புறுத்தினோம். எந்தப் பலாத்கார நடவடிக்கையிலும் எங்களுக்குத் தொடர்பில்லை என்றும், அரசாங்கத்திற் கெதிரான சதி நடவடிக்கைகளில் நாங்கள் எந்தக் கூட்டத்திலும் தொடர்பு கொள்ளவில்லை என்றும் நாங்கள் அரசாங்கத்திற்கு உறுதிகூறினோம்."

+ தோமஸ் கூறே O. M. I.

கொழும்பு அதிமேற்றிராணியார்

26-11-60.

### அரசாங்க அறிக்கை

அரசாங்கம் இப்போது பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"மேற்படி மகாநாட்டில் கத்தோலிக்க குருமாருக்கு எவ்வித வாக்குறுதியும் அளிக்கப்படவில்லை.

"இப்பொழுதுசட்டமாகியுள்ள உதவிபெறும் பாடசாலைகள், பயிற்சிக்கலாசாலைகளின் விசேஷ மசோதாவைப் புனராலோசனைசெய்வதாகவோ, அதை அமுல் நடத்தாது விடுவதாகவோ எவ்விதபேச்சும் அங்கு இடம் பெறவில்லை.

[குறிப்பு :

ஆகவே, தங்கள் கல்வி உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்த நிலை கத்தோலிக்கமக்களைவிட்டு இன்னும் அகலவில்லை.

— ஆசிரியர்]

### பிரதமமந்திரி அவர்களுடன் தாம்நடத்திய பேச்சுவார்த்தைகள்பற்றிக் கத்தோலிக்க மேற்றிராணிமார் விடுத்துள்ள

# இரண்டாவது அறிக்கை

கார்த்திகை மாதம் 25-ம்திகதி காலை தாங்கள் கைச்சாத்திட்ட பத்திரத்தின் கருத்துகள் பற்றி எழுந்துள்ள முரணான அபிப்பிராய நிலையைக் கத்தோலிக்க மேற்றிராணிமார் ஆராய்ந்ததன் பயனாக, விஷயத்தைத் தெளிவுறுத்துமாறு பின்வரும் அறிக்கையை வெளியிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

"கத்தோலிக்க மக்களின் சமயக் கோட்பாடுகளையும், அனுட்டானங்களையும் பாதிக்கக்கூடிய எவ்வித நடவடிக்கையையும் தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதென்று மேற்றிராணிமார் முழுப்பேச்சுவார்த்தைகளின் போதும் துலக்கமாகக் கூறியுள்ளனர். ஆனால், இப்போது சட்டமாகியுள்ள உதவிபெறும் பாடசாலைகளின் மசோதா அமுல் நடத்தப்படும்பொழுது புதிய நிர்வாகத்தின் கீழும் உதவிபெறும் பாடசாலைகள் நடைமுறையில் முன்னிருந்தது போலவே தொடர்ந்து நடாத்தப்படும் என்றும், இரண்டாவது கல்வி மசோதாவைத் தயார் செய்யுமுன் நியமிக்கப்பட இருக்கும் விசாரணைக்குழு அவர்களுடைய கோரிக்கைகளுக்குத் தகுந்த சாவதானம் அளிக்கு

[தொடர்ச்சி 2-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க ஐக்கியசங்கம்

# பிரதமருக்குப் பதிலளிக்கின்றது

(முன்தொடர்ச்சி)

**எங்கள் கோரிக்கை:**

கத்தோலிக்கர்களாய நாங்களும், எங்களுடைய மேற்றிராணிமார்களும் கோருவது யாதெனில், எங்கள் பாடசாலைகளில் நாம் விரும்பும் மத சூழ்நிலையை எவ்வித அரசாங்க உதவியுமில்லாமல் தாமும் உருவாக்க எமக்கனுமதியளிக்க வேண்டுமென்பதே. எமது மேற்றிராணிமார்கள் தங்களை நேர்முகமாகச் சந்தித்தபொழுது விசேஷசட்டங்களையும், சலுகைகளையும் கோரினர்கள் என்று மறைத்துச் சொல்லுதல் ஆதாரமற்ற கூற்றாகும். கத்தோலிக்கர்களினதும், அவர்களுடைய மேற்றிராணிமார்களினதும் கோரிக்கை யாதெனில், தங்கள் பாடசாலைகளைத் தங்கள் சொந்தச் செலவில் தாங்களே நடாத்தும் உரிமையைப் பறித்து, தங்கள் பிள்ளைகளை அரசாங்கப்பாடசாலைக்கு அனுப்பும்படி கட்டாயப்படுத்தக் கூடாது என்பதே. இலவசமாக அரசாங்கப் பாடசாலைகள் இருந்தபோதும் ஒரு கத்தோலிக்கன் ஒரு தனியார் பாடசாலைக்குக் கட்டணம் செலுத்திக் கல்வி கற்கவிரும்பினால் அது அவனைப் பொறுத்த விடயம். அதைக்குறித்து அரசாங்கம் எவ்வித கவலையும் கொள்ள வேண்டியதில்லை. "பெற்ரு"ப் பகுதியில் மிகமலிவாகக் கொள்ளக் கூடிய ஒருபொருளைக் "கோட்டை"ப் பகுதியில் கூடியவிலை கொடுத்து வாங்கும் மக்களும் உளர்.

நாங்கள் எமக்குப் பாரபட்சமாகவோ அன்றேல் ஏனைய ஸ்தாபனங்கட்கு எதிராகவோ எதையும் கேட்கவில்லை. "சாம்ராச்சிய" நாடுகளில் பிரசைகள் சாதாரணமாக அனுசரித்துவரும் உரிமையையே நாம் கோருகிறோம். அதுவும் மற்றும் சாம்ராச்சிய நாடுகளில் தனியார் பாடசாலைகட்கு அரசாங்க உதவி அளிக்கப்பட்டு வரும்பொழுது நாம் தற்போது உதவியில்லாமலே பாடசாலைகளை நடாத்த அனுமதி கோருகிறோம். நாம் மேற்குறிப்பிட்ட ஆடிப் பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அமெரிக்கா சுட்டிக்காட்டப்பட்டிருந்தது ஆனல், அமெரிக்கர்கள் அரசாங்க பாடசாலைகளை நடத்தினலும் அரசாங்க உதவியின்றிப் பாடசாலைகளை நடாத்த அந்த நாட்டில் எவ்வித தடைகளுமில்லை. உலகில் எந்த ஜனநாயகநாடும் தனிப்பாடசாலைகளை நடாத்தும் உரிமையைத் தனது பிரசைகட்கு மறுக்கவில்லை. ஆகையால், சர்வாதிகார நாடுகட்குப் புறம்பான எல்லா நாடுகளிலும் நிலைத்திருக்கும் இவ்வுரிமையை எமக்கும் மறுக்க வேண்டாம் என்பதே நாம் கௌரவ பிரதமரவர்களுக்கும், மந்திரிசபைக்கும் சமர்ப்பிக்கும் விண்ணப்பமாகும். "அமைதியாயிருங்கள்" என்ற பிரதமரின் வேண்டுகோளை நாம் போற்றுகிறோம். எனினும் ஆட்சேபம் தெரிவிக்கும் உரிமை ஜனநாயகத்தின் பெறுபேறுகளில் ஒன்று என்பதைத் தங்கட்குச் சமர்ப்பிக்கிறோம்.

நாங்கள் ஏற்காத ஒருவிடயத்திற்கு எதிராக நாம் அறிந்த எல்லா நியாயபூர்வமான வழிவகைகளையும் கையாண்டு எங்கள் அதிருப்தியைச் சொல்லாலும் செயலாலும் காட்டாமல் விட்டால், அரசாங்கம் எமக்கெவ்வித இளக்காரமும் அளிக்க மாட்டாது. முறையான அதிகாரத்திற்கு அமைய வேண்டுமென்பது கத்தோலிக்க திருச்சபையின் அடிப்படை ஒழுங்குகளில் ஒன்ருகும். இவ்வொழுங்கு "சேசாருடையதைச் சேசாருக்கே கொடுங்கள்" எனமிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனல், **ஆட்சேபம் காண்பிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் நாம் கண்மூடித்தனமாக அமைய வேண்டுமென்பதோ, அமைதியாயிருக்கவேண்டுமென்பதோ அதன்கருத்தல்ல.**

**பொதுவுடமைவாதிகளின் செயல் திட்டம்:**

**கத்தோலிக்கர்கள் சீனவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் பொதுவுடமைவாதிகளின்கீழ் அதிகமாகத் துன்பப் பட்டிருக்கிருர்கள். பொதுவுடமைவாதிகளுடைய செயல்திட்டத்தை நாம் நன்கு அறிவோம். அதன் மறைவான செயல்களை நாம் இங்கும் காண்கிருேம்.** எப்படியெனில்,

"**முதலாவது:** பொதுவுடமைவாதம் முற்றுகச் சமரசப்படுத்தமுடியாத எதிரிகள் கத்தோலிக்கர்களாயிருக்கிறபடியால், எமது பாடசாலைகளையும் பாடசாலைக் கட்டிடங்களையும் பறிமுதல் செய்தல் எம்மை அதிருப்திப்படுத்தும்படியும், மற்றவர்களிடமிருந்து பிரித்து வைக்கும்படியும் எமது ஸ்தாபனங்களையும் எமது மேற்றிராணிமார்களையும் பரிகசித்தல்.

**இரண்டாவது:** பேச்சுச் சுதந்திரத்தையும் எதிர்க்கட்சிகளையும் அடக்குவதற்குப் பத்திரிகைகளைப் பறிமுதல் செய்தல் அல்லது பொதுசன கூட்டுறவு ஸ்தாபனங்களாக மாற்றியமைப்பது நன்று எனக்கூறி அவற்றின் அதிகமான பங்குகளைப் பொதுவுடமைவாதிகளே பிறநாட்டு உதவியைக் கொண்டு சுவீகரித்துப் பத்திரிகைகளைத் தம்வசப்படுத்தல். இராசரட்டைக் கிராமமக்களோ, உறுகுணைச் சனங்களோ, சுதந்தரக்கட்சியின் முறையான அங்கத்தவர்களோ, நகர தொழிலாளரோ, அன்றேல் பழைய செல்வந்தரோ இப்பங்குகளை வாங்கப் பணம் தேடிக்கொள்ள மாட்டார்கள்.

**மூன்ருவது:** சாசன மகாசபை ஒன்றை நிறுவுவதின்மூலம் **மல்வத்தை அஸ்கிரிய** பௌத்த மகாசபைகளின் பூர்வீக அதிகாரத்தையும், தனித்தியங்கும் சுதந்திரத்தையும் நிர்மூலமாக்கி, பௌத்தர்கள் மத்தியில் பிரிவினையை உண்டுபண்ணுதல்.

தற்போது இவற்றை நாம் எதிர்க்காவிட்டால் இனி ஒருபோதும் எதிர்க்க முடியாமல் போய்விடும். தலைலாமாவும் மற்றும் லாமாக்களும் தங்கள் உரிமைகட்காக நடத்திய போராட்டத்தைச் செஞ்சீன அரசாங்கம் "தேசிய விரோதம்" "சோசலிச விரோதம்" என வர்ணித்துள்ளது.

நாட்டிற்கும் எனது மதத்திற்கும் நான் ஆற்றவேண்டிய கடமைகளினிமித்தம் நான் இக்கருத்துக்களை வெளியிடுகிறேன். கத்தோலிக்கராய எங்கட்குச்சிறிது அனுதாபமும் நல்லெண்ணமும் காட்டப்படும் என்று நம்பிக்காத்திருக்கிறேம்.

கத்தோலிக்கர்கள் "அக்குவைனஸ்" பல்கலைக்கழகக் கல்லூரியின் தேவைக்கென விலைகொடுத்து வாங்கி வைத்திருந்த காணியையும், மினுவாங்கொடையில் கோவில் கட்டப்பட இருந்த நிலத்தையும் அரசினர் அபகரித்துக்கொண்ட செயல்களைப் பழிவாங்குவதற்காகவும், **ஆத்திரத்தை மூட்டுவதற்காகவும் செய்யப்பட்ட செயல்களாக வர்ணிக்கலாம்.** இவற்றை நிராகரித்து அந்தக் காணிகளைத் திருப்பிக் கொடுக்குமாறு மேற்குறிப்பிட்ட மனப்போக்குடனும், பரிவுடனும் வேண்டி நிற்கிறேன். எம் மத்தியில் இணக்கங்காணமுடியாத அபிப்பிராய பேதங்கள் இருந்த போதிலும் அவற்றோடு நல்லெண்ணமும் இருக்கலாம். பாரபட்சமான செயல்களும் வன்சொற்களும் நல்லெண்ணத்தை உருவாக்க மாட்டா. இவ்வளவெல்லாம் சொல்லியும், செய்தபின்னரும் கத்தோலிக்கர்களாய நாம் அந்நியரல்ல நாங்களும் இந்நாட்டவரே. நாங்கள் அரசாங்கத்தைக் கண்டித்த பொழுதும் எங்கள் சகல தேவைகளையும் பூர்த்திசெய்யுமென எதிர்பார்க்கும் அரசாங்கம் ஒன்றே ஒன்றுதான். அது எமது அரசாங்கம். அவர்கள் எமது மந்திரிகள். அது எமது மந்திரிசபை. அவர் எமது பிரதம மந்திரி என்பதை நாம் நன்குணர்கிறோம்.

# "வேதகலாபனையை உண்டுபண்ண கொம்மியூனிஸ்தர்கள் சூழ்ச்சி செய்கின்றனர்"

**— காலி எம். பி.**

"திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவைச் சூழ்ந்துள்ள கொம்மியூனிஸ்தர்கள் வேதகலாபனையை உண்டுபண்ண சூழ்ச்சி செய்கிறுர்கள்' என்று காலி எம். பி. யான **திரு டபிள்யூ. தகாநாயகா** அவர்கள் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதை எதிர்க்குமுகமாக **வென்னப்பூவாவில்** நடந்த பிரமாண்டமான கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார். சென்ற 13-11-60 இல் கத்தோலிக்கரும், பௌத்தர்களுமாகச் சுமார் 20,000 பேர் வென்னப்பூவாவில் உள்ள யோசேவ்வாஸ் கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற எதிர்ப்புக் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தனர்.

திரு. தகாநாயகா அவர்கள் தமது உரையில் மேலுங் கூறியதாவது: கொம்மியூனிஸ்தர்கள் இலங்கையின் **பெரும்பான்மைச் சமயத்தினரைச் சிறுபான்மையான ஒரு சமயத்தை அழிப்பதற்குக் கருவியாகப் பயன்படுத்தப் பிரயத்தனம் எடுக்கின்றனர்.** பாடசாலைகளை அரசாங்கம்எடுக்கும் பிரச்சனையினல் நாட்டில் இரத்தக்களரி ஏற்படுமானல். திருமதி பண்டாரநாயகா அவர்களே இதற்கு முழுதும் பொறுப்பாளியாயிருப்பர்.

இலங்கைச் சரித்திரத்தின் மூல நூலாகிய மகாவம்சத்தில் குறிப்பிட்டிருக்கும் சிங்கள அரசர்களின் **புனிதமான பாரம்பரிய ஆட்சிமுறைக்கு முற்றும் மாருக** இன்றைய அரசாங்கம் நடந்துகொள்வதைக் கண்டு நாம் தலைகவிழ வேண்டியிருக்கின்றது. ஏனெனில், சிங்கள மன்னர்கள் பிற மதத்தினரை வருத்தியதில்லை. அவர்கள் மதஸ்தாபன பாடசாலைகளை நடத்துவதற்கு நிலபுலங்களையும், முழுக் கிராமங்களைத்தானுமே நிந்தகமாக அளித்துள்ளனர்.

பதவி ஏற்குமுன் சிறுபான்மையினரின் சமய சுதந்திரம் பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்தபொழுதும், பதவிக்கு வந்தநாள் முதல் கம்மியூனிஸ்தருடன் ஒப்பந்தஞ் செய்து கொண்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# இரண்டாவது அறிக்கை

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

மென்றும் அவர்கட்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.

மேற்படி திட்டமான வாக்குறுதியின் பின்னரே கத்தோலிக்க மேற்றிராணிமார் 1960-ம்ஆண்டு மார்கழிமாதம் 1-ம்திகதி நடைபெறவிருக்கும் நிர்வாக மாற்றத்திற்கெதிராகத் தாங்கள்எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கமாட்டார்களென்று தங்கள் சார்பில் வாக்குறுதி அளித்தனர்.

ஆனல், அரசாங்கம் பின்னர்விடுத்த அறிக்கையின் பிரகாரம் புதியசட்டம் கத்தோலிக்கரின் மதக்கோட்பாடுகளையும், அனுட்டானங்களையும் பாதியாமல் இருக்காது என்பதற்கு எவ்வித வாக்குறுதியும் தனது சார்பில் அளிக்க அதுதயாரில்லையென்று தோன்றுகின்றது

ஆகவே, கத்தோலிக்க மேற்றிராணிமார் தாங்கள் எந்த நிலைபரத்தில் மேற்படி வாக்குறுதியை அளித்தனர் என்பதைக் கத்தோலிக்க மக்களுக்குத் தெரிவித்தல் தங்கள் கடமைஎனக் கருதுகின்றனர்.

ஆனல், அரசாங்கத்திற் கெதிரான எவ்வித சதி நடவடிக்கைகளிலும் தாங்கள் ஒரு போதும் தொடர்புகொள்ளவில்லை என்றும், இந்தச் சட்டத்தினல் பாதிக்கப்படுவோர் தங்கள் சனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதற்கும் பலாத்காரமுறைகளைக்கையாளுவதைத் தாங்கள் கண்டிப்பதாகவும் மேற்றிராணிமார் மீண்டும் அழுத்திக் கூறவிரும்புகிள்ருர்கள்.

இலங்கைக் கத்தோலிக்க
மேற்றிராணிமாரின் சார்பாக

+ **தோமாஸ் கூரே O. M. I.**

கொழும்பு அதிமேற்றிராணியார்.
28-11-60

[குறிப்பு

இலங்கைக் கத்தோலிக்க மேற்றிராணிமார் கத்தோலிக்கமக்களின் கல்வி உரிமைகளை நிலைநாட்டுவதற்குப் பதிலாக அரசாங்கத்திடம் சரணடைந்து விட்டனர் என்னும் அபிப்பிராயம் முற்றும் தவருனது என்பதை மேற்படி அறிக்கை வெட்டவெளிச்சமாகக் காட்டுகின்றது.

**—ஆசிரியர்]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

### அரசினர் பாடசாலைத்தவணைகள்

முஸ்லீம்மாணவர்கள் பெருந்தொகையாகவுள்ள அரசினர்பாடசாலைகள் நீங்கலாக ஏனைய அரசினர் பாடசாலைகளிலே புதியவருடத்தில் முதலாந்தவணை தை 3-ந்திகதி ஆரம்பமாகிப் பங்குனி 30-ந் திகதி முடிவாகும். இரண்டாந்தவணை வைகாசி 2-ந்திகதிஆரம்பமாகி ஆவணி 4-ந்திகதி முடிவாகும். மூன்ருந்தவணை ஆவணி 30-ந்திகதிஆரம்பமாகி மார்கழி 1-ந்திகதி முடிவாகும்.

### பொதுத்தராதரபத்திர பரீட்சை

நிகழும் 1960-ம் ஆண்டுக்குப்பின் எஸ். எஸ். சி. பரீட்சைத் தராதரபத்திரம் வழங்கப்படமாட்டாது. இனிமேல் பொதுத்தராதர பத்திரபரீட்சை (ஜி. சி. ஈ. சாதாரண) பரீட்சைகள் ஒவ்வொன்றிலும் சித்தியடையும பாடங்களுக்கே தராதரபத்திரங்கள் வழங்கப்படும். 1961-ம்ஆண்டு தைமாதமுதல் ஜி. சி. ஈ. வகுப்பின் முதலாவதுவருடத்தில் பிரவேசிக்கும் மாணவர்கள் கலைப்பகுதி, விஞ்ஞானப்பகுதி, தொழில்நுட்பப்பகுதிஎனும் மூன்றுபகுதிகளில் ஒன்றைத் தெரிவுசெய்யும்படி உத்தரவிடப்படுவார்கள். மூன்றுபகுதிகளிலும் முறையே மாணவர்கள் தெரிவு செய்யவேண்டிய பாடங்களின்விபரம வருமாறு :

(1) கலைப்பகுதி — பாஷை, இலக்கியம், சரித்திரம், குடியியல, பூமிசாஸ்திரம், பொருளாதாரம், சித்திரம.

(2) விஞ்ஞானப்பகுதி — பௌதீக சாஸ்திரம், இரசாயனசாஸ்திரம், தாவரசாஸ்திரம், மிருகசாஸ்திரம், சீவவர்க்க சாஸ்திரம், பொதுவிஞ்ஞானம, "அப்பிளைட்" கணிதம், உயர்தாக்கணிதம் பூமிசாஸ்திரம், சுகாதாரவிஞ்ஞானம், விவசாயவிஞ்ஞானம்.

(3) தொழில்நுட்பப் பகுதி — சித்திரம், சங்கீதம், ஊசிவேலை, கைப்பணி, மரவேலை, நெசவுவேலை, உலோகவேலை, மட்பாண்டவேலை, கணக்கு, சுருக்கெழுத்து, தட்டெழுத்துப்பயிற்சி, பொருளாதாரம்.

மாணவர் ஒவ்வொருவரும் இந்தப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் ஏழுபாடங்கள்படித்துப் பரீட்சைக்குச்சமூகமாக அனுமதிக்கப்படுவார்கள். சமயபாடம் இனிமேல் பொதுப்பாடமாயிருக்கும்.

### நடனக்கலையும் நாடகக்கலையும்

நாட்டிலே நடன, நாடகக்கலைகளை விருத்திசெய்யுமாறு மாகாணக்கம்மிற்றிகள் அமைக்கப்படவிருக்கின்றன. அரசாங்க கலாசாரபகுதியே இந்தக் கலாசாரக்கம்மிற்றிகளை அமைக்கவிருக்கின்றது. முந்தஇவைகள் காலி, கண்டி, அநுராதபுரம், யாழ்ப்பாணம், குருநாகல், கேகாலை, பதுளை, திருகோணமலை, மாத்தறை ஆகியவிடங்களில் அமைக்கப்படும். இந்தக்கம்மிற்றிகள் கலைவிழாக்களும், கலைப்பொருட்காட்சிகளும் நடத்தும். மாவட்ட அரசாங்க அதிபர்களே இவற்றின் தலைவர்களாய் இருந்துவருவார்கள்.

### களவிலே வடிக்கப்படும் குடிவகைகள்

இலங்கையிலே களவாகவடிக்கப்படும் சாராயமுதலாம் குடிவகைகளிலே 28 இனங்கள் இருப்பதாக இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது. இவைகளில் சில கள்ளிலிருந்தும், வேறுசில உவைன் ஸ்பிறிற்றிலிருந்தும்,மற்றும்சில மறு கிராவகங்களிலிருந்தும் வடிக்கப்படுகின்றனவாம். நாடெங்குமுள்ள ஆஸ்பத்திரிகளிலே பெருந்தொகையினர் நச்சுத்தன்மையுள்ள அபாயகரமான இந்தக்குடிவகைகளை அருந்தியதால் நோய்வாய்ப்பட்டார்களென்று டக்றர்மார் நம்புகின்றனர். இவைகளை அருந்துவதால் சிலருக்குக் கண்குருடாகிவிடுகிறதென்று அவர்களில்சிலர் நம்புகிறுர்கள்.

### யாழ்ப்பாண மாநகரசபை

யாழ்ப்பாண மாநகரசபைப் பொதுத்தேர்தல் நிகழும்மார்கழிமாதம் 17-ந் திகதி சனிக்கிழமை நடந்தேறுமென்று யாழ்ப்பாண பொதுத்தேர்தல் உதவி அதிகாரியான திரு. டி. எஸ். இரத்தினதுரை தெரிவித்திருக்கின்றுர். 15வட்டாரங்களுக்கும் 44 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றுர்கள். இவர்களில் 8பேர் தமிழரசுக்கட்சியினர். 3பேர் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர். 2பேர் சமசமாஷக் கட்சியினர். ஒருவர் கம்யூனிஸ்த கட்சியினர். ஏனையோரெல்லாம் சுயேச்சைகள். 13-ம்வட்டாரத்தில் போட்டியிட்ட திரு. கே. மகேசன் போட்டியினின்றும் விலகியிருக்கின்றுர்.

### பிரதமரின் வாசஸ்தலம்

பிரதமர் ஸ்ரீமா தனது உத்தியோக பூர்வமான "ரெம்பிள் றிறீ"ஸில் தன்னுடைய இருபுதல்விகளோடும், புதல்வனோடும் சென்ற புதன்கிழமைகாலை குடிபுகுந்துள்ளார் அதனால் இந்த வாசஸ்தலத்தில் இராணுவபாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனைப் பாதுகாக்குமபொறுப்பை அவர் குடிபுக இரு தினங்களின்முன் இராணுவம்ஏற்றது.

### பண்டாரநாயக்கா கொலைவழக்கு

பண்டாரநாயக்கா கொலைவழக்கு வருகிறதைமாதம் சுப்பிறீங்கோட்டிலே விசாரணைசெய்யப்பட விருக்கிறது. வழக்காளிதரப்பில் சிரேஷ்டநியாய வாதியாக அப்புக்காத்து திரு. ஜோர்ஜ் சிற்றி, கியூ. சி. அவர்கள் ஆஜராகவிருக்கின்றுர். எதிரிகள்சார்பாக வாதிக்குமாறு பிரித்தானிய பிரபலவழக்கறிஞரான திரு. பிறியாஸ் குவாஸ், கியூ. சி. அமர்த்தப்பட்டிருக்கிறுர். இவர் வருகிற தைமாதத்தின் முதல்வாரத்திலே கொழும்புவந்து சேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### போஸ்றல்ஆடர் சலார்கள்

போஸ்றல் ஆடர்மூலம் பணம்அனுப்புவதற்கான சலார்வீதங்களைத் தபால் பகுதி உயர்த்தியிருக்கின்றது. இந்த உயர்ந்த விகிதங்களின்படி, 50சதத்திலிருந்து 3ரூபாவரை 5சதமும், 4ரூபாவிலிருந்து 10ரூபாவரை 10 சதமும், 15ரூபாவிலிருந்து 20ரூபாவரை 20சதமுமாகச் சலார்இறுக்கவேண்டும்.

### ஆசிரியர் எம். எம். துரைசிங்கம்

சம்பத்திரிசியார்கல்லூரியிலே கடந்த 31ஆண்டுகளுக்குமேல் ஓர்ஆசிரியராயிருந்து உயர்தரவகுப்புகளில் கல்வி பயிற்றிவந்த திரு. எம். எம். துரைசிங்கம் அவர்கள் இம்மாதம் 1-ந்திகதி முதல் தம்முடைய பதவியிலிருந்து இளைப்பாறப்போவதாக வித்தியாதிபதிக்குத் தெரிவித்துள்ளாரென அறிகின்றேம். ஆசிரியர்அவர்கள் 37வருடகாலம் கத்தோலிக்க கல்லூரிகளில் கல்வித்தொண்டாற்றியிருக்கின்றுர். இவர் தமது ஓய்வுநேரங்களிலே தமிழ், சரித்திரம், பொருளாதாரம், லத்தீன்முதலாம் பாடங்கள்பயிற்றியவர்களில் குருமார், கன்னியாஸ்திரிமார் உட்படச் சுமார் 50பேருக்குமேல் இன்று பட்டதாரிகளாய் விளங்குகின்றுர்கள். தமது இளைப்பாற்றிகாலத்திலே இவர்பட்டதாரிவகுப்புகளை நடத்திவரவிருக்கிறுரென அறிகின்றேம்.

---

"தான் நரகத்திற்குப்போவதற்கு மனிதன் எடுத்துக்கொள்ளும் பிரயாசையில் பாதியைப் பயன்படுத்தினுல் அது அவனுக்கு மோட்சத்திற்கு வழிகாட்டப் போதுமானது."

# பாடசாலைப் பாதுகாப்பு இயக்கம்

## ஆனைக்கோட்டை

மேற்படிவிசாரணைப்பங்கைச்சேர்ந்த கிறிஸ்தவர்கள் சென்ற ஞாயிறுவாரம் (27-11-60) திவ்விய பூசையின்பின் பாடசாலை மண்டபத்தில கூடினுர்கள். பாடசாலைகளை அரசினர் பறிப்பதை யிட்டுச் சொற்பொழிவுகள் நடந்தன. எல்லோரும் ஏகமனதாய் அதைஎதிர்க்கும் நோக்கமாக, பாடசாலைப் பாதுகாப்புச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி, ஆண்களும் பெணகளுமாய்ச் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்டோர் தங்களது நாமங்களைக் கட்டளைச்சுவாமியாரிடம் கொடுத்தனர்.

"எங்கள் பிள்ளைகள் எங்களுடையவர்களா, அல்லது அரசாங்கத்துக்குடையவர்களா ?" என்ற எண்ணமே அவர்கள் மனதில் திகிலையுண்டாக்கியது. பிள்ளைகளை ஒனுய்களின் காங்களில்பறிகொடுப்பதிலும் பார்க்கத் தாங்கள் யாசகஞ்செய்து தமது பிள்ளைகளைப் படிப்பிப்பது உத்தமமானது என அக்கிராசனர் சொல்லிமுடித்தார்.

## தாளையடி

"வீட்டுக்கு ஒருவர் வீதம் நாம் சிறைச்சாலைக்குப் போகவும தயார்" என்று பறைசாற்றி, சென்றஞாயிற்றுக்கிழமை தாளையடி றோ. க. பாடசாலை மண்டபத்தில் நடந்தகூட்டமொன்றில நன்றிகூறி முடித்தார் அங்குள்ள பெற்றோரில் ஒருவர்.

இக்கூட்டமானது பாடசாலைகள் அரசாங்க மயமாக்கப்படும் அநியாய சட்டத்தைப் பெற்றோர் அங்கீகரிக்கவில்லையெனக் காட்டும் நோக்கமாய்க் கூடப்பட்டது. ஆற்றப்பட்ட சொற்பொழிவுகள் வேகம் கொண்டவைகளாயும், பெற்றோரின் அங்கலாய்ப்பையும், துக்கத்தையும் விரித்துக் காட்டுவனவாயுமிருந்தன. அவற்றுள் மாணவர்களாகிய ஜெரேமியஸ், மொனிக்கா என்பவர்களின் தெள்ளிய தமிழில், மெல்லிய குரலால்ஆற்றப்பட்ட இரு சொற்பொழிவுகளும் "இச்செல்வப் பிள்ளைகளை ஆக்கித்தந்த எம் பாடசாலைகள் நாஸ்திகர்கரங்களில் போவதா?" என்ற ஆர்வத்தைப் பெற்றோர் மனதில் உண்டுபண்ணிவிட்டது. கூட்டம் செபத்துடன் முடிவாகியது.

## புங்குடுதீவு

கடந்த 24-11-60-இல் கத். பெற்றோர்சங்கத்தின் விசேஷகூட்டம் திரு. ச. அ. மனுவேல்பிள்ளை அவர்களின் தலைமையில் கத்தோலிக்க பெற்றோருக்கு ஏற்பட்டுள்ள மிகவும் ஆபத்து நிறைந்த கல்விச்சட்டத்தை ஆராயும் நோக்கமாகக் கூட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் பேச்சாளராய்த் தலைவருடன் திருவாளர்கள் அ. எஸ்தாக்கி, க. யாக்கோப்பு, வ. சிறில், க. எற்வேட், இன்னும் பலர் பலபல கோணங்களிலுமிருந்து இவ்விஷயத்தை நோக்கத்தக்க வகையில் தமது கருத்துக்களைத் தெளிவாக விளக்கி இச்சட்டத்தை எதிர்ப்பதற்கு நாம் ஒன்றுபட்டுழைக்கவேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறினுர்கள்.

எம்முடைய பிள்ளைகளை இன்னுமொருகயவன் வலோற்காரமாகத் தன்னுடைய பலத்தை உதவியாகக் கொண்டு எம்மிடமிருந்து பறித்துப் போக முயற்சிக்கும்போது நாம் அவனைத் தடுக்க முயற்சிப்பதும், கயவன் எம்முடைய பிள்ளைகளைக் கொண்டு போகவிடாது தடுப்பதற்கு எமது அயலவரையும் உறவினரையும அழைப்பதும், "கயவனே நீ இப்போது கொண்டு போனுலும் உன்னிடமிருந்து எமது பிள்ளைகளைப் பறித்துப்போடுவோம்" என்று அவனுடன் சபதம் செய்வதும் இயற்கையல்லவா? இப்படியாக நாம் எமது குழந்தைகளை மற்றவர்கள் பாரதீனப்படுத்த முயற்சிக்கும் போது அதற்கெதிரான நடபடிக்கை எடுப்பது எம்முடைய காத்திரமான கடமையாகும் என்று திரு. அ. எஸ்தாக்கி என்பவர் தெளிவாகக் கூறினுர்.

மேற்படி தீர்மானத்தை ஆதரித்துத் திரு. வெ. வஸ்தியாம்பிள்ளை, திரு. டக்றர் எஸ். லோறன்ஸ், திரு. ச. பெஞ்சமின், திரு க. தோமாஸ் என்பவர்களும் பேசினுர்கள். ஈற்றில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. எங்கள் பிள்ளைகளை நாங்கள் விரும்புமகத்தோலிக்கபாடசாலைகளில் கல்விபயிற்றுவதற்கு எமக்குள்ள அடிப்படை உரிமையையும், சுதந்திரத்தையும் எமக்கு மறுக்கும் கல்விச்சட்டத்தை எமது முழுச்சக்தியோடும் எதிர்க்கிறேம்.

2. மேற்படி உரிமையையும், சுதந்திரத்தையும எமக்குப் பெற்றுத்தர முயற்சிக்கும் எமது ஞானத் தலைவர்களை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேம்.

க. எற்வேட்,
காரியதரிசி.

## கிளிநொச்சி

மேற்படி பாதுகாப்பு இயக்க ஆரம்ப கூட்டம் சென்ற 20-11-60 ஞாயிற்றுக்கிழமை பகல 10 மணிக்குச் சென் தெரேசா மாவித்தியாலய மண்டபத்தில் கட்டளைக்குரவர் சுவாமி சூசைநாதர் ஓ. எம். ஐ. அவர்கள் அனுசரணையில் நடைபெற்றது. கிளிநொச்சி, வட்டக்கச்சி, கல்மடு, முரசுமொட்டை, ஆனையிறவு, உருத்திரபுரம் ஆகிய இடங்களில் உள்ளவர்களின் பிரதிநிதிகளாய் இருநூற்றிற்கு அதிகமானோர் சமூகமளித்தனர்.

தலைமைச் சுவாமிஅவர்கள் இப்பகுதிக் கத்தோலிக்கருக்கென ஆரம்பிக்கப்பட்டபாடசாலைகளை அரசாங்கம் கைப்பற்றப்போகும் ஆபத்துத் தருணத்தில் கத்தோலிக்கர்கள் சிந்தித்துக் கருமம் ஆற்றவேண்டியதன் அவசியத்தை விளக்கிக் கூறினுர்.

இவ்வியக்கத்தலைவராகத் திரு. ஜே. எற்வேட் அவர்களும், காரியதரிசியாகத் திரு. அ. எற்வேட் அவர்களும் சபையோரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. ஜே. எற்வேட்அவர்கள்தலைமையில் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. சுவாமி இம்மானுவேல் ஓ. எம். ஐ. அவர்கள் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதினுல் எம்திருமறைக் கேற்படவிருக்கும் தீங்குகளைத் தீர்க்கமாகவும், தெளிவாகவும் விளக்கிக்கூறினுர்.

பெற்றோர்சார்பாகப் பேசிய திரு. ரி. கே. அமிர்தநாதர் அவர்கள் பாடசாலைகளை அரசாங்கம் கைப்பற்றுமல் பாதுகாப்பதில் பெற்றோர் எல்லோரும் ஒருமனமாய் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறினுர். தாய்மார் சார்பில் பேசிய திருமதி கெலன் அம்மா சமீபத்தில் பிரதமமந்திரிஅம்மையார் தாய்மார்மட்டில் காண்பித்த எதிர் மனப்பான்மையைச் சுட்டிக்காட்டினுர். மாணவர்பேரால் செல்வன் எவ். எக்ஸ். லோறன்சும், சிவராசசேகரமும் பேசினுர்கள். பின்பு பின்வரும் எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்கள் பிரதமமந்திரியாருக்குத் தந்திமூலம் தெரிவிக்கப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

1. கிளிநொச்சி விசாரணைப் பங்கைச்சேர்ந்த கத்தோலிக்கமக்களாகிய நாங்கள் பாடசாலைகளை அரசாங்கம் கைப்பற்றுவதை வன்மையாகக் கண்டிக்கிறேம்.

2. எங்கள் மத உரிமை வேண்டுகோள் சாத்தியமாகும்வரை எங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாதிருப்போம் எனத் தீர்மானிக்கின்றேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேப அப். சபை வெளியீடு

## மார்கழிமாதம்


**பொதுக்கருத்து:** விசுவாசிகளது தாழ்ச்சியும், சாந்தமும் தேசங்களினூடே ஒற்றுமையையும், சமாதானத்தையும் விருத்தி பண்ணும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** இந்தியகத்தோலிக்கர் சமுதாய அப்போஸ்தல பணிகளில் தமக்குள்ள கடமைகளைச் செவ்வனே உணரும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத

பாதுகாவலன்

1960-ம் ஆண்டு
மார்கழிமாதம் 1-ந் திகதி



## தேவ அழைத்தல்களின் தினம் — மார்கழி 8.

## நம் மேற்றிராணி ஆண்டவரின் நிருபம்

மேற்றிராணியார் இல்லம்,
யாழ்ப்பாணம்.
15-11-60.

அன்பான குருப்பிரசாதிகளே! யேசுக்கிறீஸ்துநாதரில் எமக்குமிகவும் அருமையான பிள்ளைகளே!

எங்கள் மேற்றிராசனத்தில் எங்களாண்டவருக்காகப் பணியாற்றும் திருத்தொண்டர்களின் அவசியத்தை இன்றுநாம் அதிகமாக உணருகின்றோம். உங்கள் விசுவாச சீவியத்தை விருத்தி செய்வதற்கும், புதுக்கிறிஸ்தவர்கள் என்னும் ஏராளமான வேளாண்மையை அறுவடைசெய்வதற்கும் பெருந்தொகையான குருமாரின், சந்நியாசிகளின் சேவை இன்று வேண்டப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் தேவ அழைத்தல்களுக்காக எங்கள் செபங்களைப் பெருக்குவோம். தேவமாதாவின் அமலோற்பவ திருநாளாகிய மார்கழி 8-ந்திகதியைத் தேவ அழைத்தல்களின் தினமாக நாம் அர்ப்பணிப்போம். அன்றுதினம் குருத்துவ அழைத்தலைப்பற்றியும், சந்நியாச சீவியத்தைப்பற்றியும் விசேஷ பிரசங்கங்களும், சொற்பொழிவுகளும் செய்யப்படலாம். 8-ந்திகதிக்கு முந்தியநாட்களில் தேவ அழைத்தலைப்பற்றிச் சிந்திக்கவிரும்பும் வாலிபர்களும், பள்ளிக்கூட மாணவர்களும் அர்ச். மாட்டீனுரின் குருமடத்திற்கு அனுப்பப்படல் நன்றென எண்ணுகின்றோம். அங்கு அவர்களுக்கு விசேஷ புத்திமதிகள் கூறப்படுவதுடன், அந்தரங்கமாய் ஞானஒடுக்கம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

8-ந்திகதியன்று நடைபெறும் முழுதின சற்பிரசாத ஆராதனையின் ஓர்விசேஷ பகுதி, அதாவது பிற்பகல் 3மணிதொடக்கம் 4மணிவரையும், தேவஅழைத்தல்களின் திருமணித்தியாலமாக அனுசரிக்கப்படும். இத்திருமணித்தியாலத்தின்போது பெற்றோரும், ஆசிரியரும், பிள்ளைகளும் எங்கள் மேற்றிராசனத்தில் சேவைசெய்வதற்கு அநேக ஞானத்தொண்டர்களை அழைக்குமாறு எங்களாண்டவரிடம் மன்றாடுவார்களாக.

1961-ம் ஆண்டு தைமாதம் குருமடத்தில் சேர்ந்துகொள்ளவிரும்பும் மாணவர்களின் பெயர்களைப் பங்குக்குரவர்கள் கூடியவிரைவில் குருமடஅதிபருக்கு அனுப்பிவைப்பார்களாக.

தேவன் உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துநாதரிலும்,
அமலோற்பவமரியன்னையிலும்
உங்களைநேசிக்கும்

**+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.**
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

**குறிப்பு:** இந்தநிருபம் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமையில் இம் மேற்றிராசனத்திலுள்ள சகல கோவில்களிலும், சிற்றாலயங்களிலும் வாசித்து விளக்கப்படல் வேண்டும்.

---

## அரசாங்கமும் கம்யூனிஸமும்

அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹாவர் சமீபத்திலே தம்முடைய தூரகிழக்குச் சுற்றுப்பிரயாணத்தின்போது ஜப்பானுக்கும் விஜயம்செய்யவிருந்தார். ஆனால், அவரை அங்குவரவிடாது தடைசெய்யுமுகமாகக் கம்யூனிஸ்தர்கள் தூண்டியதின்பேரில் பெருங்கிளர்ச்சிகள் நடைபெற்று, அதனால்அவர் தமது ஜப்பானியவிஜயத்தை அந்தமட்டிலே நிறுத்திவிடலாயினர். ஆனால், சென்ற வாரம் நடந்தேறிய ஜப்பானிய பொதுத்தேர்தலில் ஜனநாயக மேற்குநாடுகளின் பக்கம் சார்பான பிரதமர் ஹயாற்ரு இகெடாஅவர்களின் மிதவாதஜன நாயககட்சி பெருவெற்றியீட்ட, கம்யூனிஸ்த கட்சி படுதோல்வியடைந்து மண்கௌவியது.

திபேத்தில்நிகழ்ந்த சம்பவங்கள் ஒருபுறமும், கம்யூனிஸ்த எல்லைத் தகராறு மற்றொருபுறமும், மேற்குநாடுகளின் சுமுகமான கொள்கைகள் இன்னோர்புறமுமாக வேலைசெய்தமையால் இந்தியா இதுவரை தான்கடைப்பிடித்து வந்த நடுநிலைமைக்கொள்கையைக் கைநெகிழ்ந்து மேற்குநாடுகளின் பக்கமாகச் சாய்ந்துள்ளது. இந்தியாவில் ஒரேயொரு கம்யூனிஸ்த இராச்சியமாயிருந்த கேரளநாடும் இன்று ஒருகம்யூனிஸ்த நாடன்று. ஏனெனில், அது இறந்தபோராடிக் கம்யூனிஸ்த பிடியிலிருந்து விலகிக்கொண்டது.

சமீபகிழக்குநாடுகளில் ஒன்றான ஈருய்க்நாடு கம்யூனிஸ்த சதிப்போராட்டத்திலிருந்தும், கம்யூனிஸ்த செல்வாக்கிலிருந்தும் வெற்றிகரமாக விடுதலைபெற்று இப்போது முன்னேறி வருகின்றது. எகிப்தியநாடு சோவியற் அரசாங்கம்செய்த பொருளாதார தந்திரசூட்சிகளிலிருந்து உபாயமாகத் தப்பிக்கொண்டதுடன் அதன் ஜனாதிபதி நாஸர் கம்யூனிஸத்தைச் சட்டவிரோதமாக்கியும், கம்யூனிஸத்துக்கு முழுமாறான பேச்சுகளை நிகழ்த்தியும், சுயெஸ்கால்வாய்த்தகராறு இருந்த [illegible] மேற்குநாடுகளின் உதவியைநாடியுமிருக்கின்றார்.

பெரிய கம்யூனிஸ்த கட்சியொன்றைக்கொண்ட இந்தோனீசிய நாடு கம்யூனிஸத்தால் பட்டபாடும், கெட்டகேடும் இம்மட்டும் போதுமென்று தனதுநாட்டிலுள்ள கம்யூனிஸ்தர்களை மட்டந்தட்டிவைத்துச் செஞ்சீனவுடன் பெரும்பிணக்கில் ஈடுபட்டிருக்கின்றது. பர்மாவும், மலாயாவும் கம்யூனிஸ்த புரட்சிக்காரர்களையெல்லாம் முற்றாகஅழித்தொழித்து இன்று அமைதியாயும், பாதுகாப்பாயும் இருந்துவருகின்றன. கினியாவொன்று நீங்கலாகப் புதிதாகச் சுதந்திரமடைந்த ஆபிரிக்கநாடுகளில் யாதாவது கம்யூனிஸ்த கூட்டுறவில்சேர விரும்புவதற்கான அறிகுறிகளகாணப்படுவனவாயில்லை. 1958-ம் ஆண்டிலே சுதந்திரசீனவின் தலையிடமாகிய போர்மோசாவைச் செஞ்சீன பயமுறுத்திவந்ததும் இப்போது நின்றுவிட்டது.

அங்ஙனமாக இன்று எமது நாட்டிலே ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினுள் சமசமாஜிகள், கம்யூனிஸ்தர்கள் முதலாம் மார்க்ஸீயவாதிகளின் செல்வாக்குக் குடிபுகுந்துவிட்டது. அதனால் அவர்கள்பாராளுமன்றத்திலோ, மற்றும் பிரசித்த கூட்டங்களிலோ எதைப்பேசினாலும் கேட்பாரில்லை. மதஸ்தாபனபாடசாலைகளையும், ஆசிரியபயிற்சிக் கலாசாலைகளையும், பத்திரிகைகளையும் அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று அவர்கள்கூறிய யோசனையைத்தான் இன்று அரசாங்கம் கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கிறது. ஆனால், இந்தஎடுப்பு ஆக்கவேலையாய் இருப்பதைக் காட்டிலும்பிந்த அழிவின்வேலையாகவே இருக்குமென்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

பிரதமர்சிறிமா கம்யூனிஸ்த பூச்சாண்டிக்குத் தான் அஞ்சப்போவதில்லையென்று அகிலஉலகமும் அதிரப்பேசலாம். ஆனால், அரசாங்கத்திலே கம்யூனிஸ்தர்களின் செல்வாக்கு இடம்பிடித்துவிட்டது. அரசாங்கம் பாடசாலைகளை, பத்திரிகைகளைத் தேசியமயமாக்கும்திட்டம் அவர்களின் சதித்திட்டம். அரசாங்கத்திலே தங்களுக்குச் செல்வாக்கு வந்து கிட்டியதும் பிறநாடுகளில் கம்யூனிஸ்தர்கள் செய்தது போன்று இங்கும்செய்ய — அதாவது கத்தோலிக்கரைத் தாக்கத்தொடங்கி யிருக்கிறார்கள். கம்யூனிஸ்த பத்திரிகைகள் கத்தோலிக்கர்மீது இல்லாத பொல்லாத காரியங்களையெல்லாம் சுமத்திவருகின்றன. ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டுவதாகச் சொல்லிகொள்ளும் பிரதமர் சிறிமாவின் அரசாங்கம் ஏதோஅவர்களுக்குக் கட்டுப்பட்டதுபோல் — தானும் அவர்களைத் தட்டிக்கொடுப்பதுபோல் வாளாவிருந்து வருகின்றது. கத்தோலிக்க திருச்சபையை ஒருகை பார்த்துவிட்டால் மற்றவைகளையெல்லாம் அண்டத்தைக் கையில்வைத்தாட்டும் பிடாரிக்குச் சுண்டங்காயும் ஒருசுமைகூலியாகுமா என்றவாறு சுளுவிலே ஒருகரை பார்த்துவிடலாம் என்பது கம்யூனிஸ்தர்கள் அநுபவத்தில்கண்ட உண்மைஎன்க.

---

## பலகோணங்களில் பரிசுத்ததந்தை

(சென்றவாரத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் தலைசிறந்த ஓவியநிபுணரொருவர் பாப்புவின் உருவப்படத்தை வரைவதற்காக ரோமாபுரிக்கு வந்திருந்தார். பாப்பரசர் ஆங்கிலமொழியை அறியார். ஓவியருக்குப் பிரான்சியபாஷையில் சிறிதளவே பரிச்சயமுண்டு. இங்ஙிலையில் சித்திரவேலை ஆரம்பமாகியது. அரியாசனத்திலமர்ந்திருந்த பரிசுத்த தந்தையிடம் சித்திரத்திற்கமைய உட்காரவேண்டிய விதம்பற்றிப் பிரான்சிய மொழியில் விளக்க முயன்று தோல்வியடைந்தார் ஓவியர். எனவே, அமர்ந்திருப்பவர் திருச்சபையின் உன்னதபதவியிலிருப்பவர், பாப்பரசரைத் தொடக்கூடாது என்ற எண்ணங்களற்றவராகத் தமது கரங்களால் பரிசுத்த தந்தையின் இரு தோள்களையும் பிடித்துச் சித்திரத்துக்கேற்ற முறையில் அமர்த்தினார். இதைக் கண்ட பாப்பரசரின் காரியதரிசி முறுமுறுத்தார். சுவிஸ்காவலர்கள் விரைந்துவந்தனர். அவர்களின் முகத்தில் சினம் தொனித்தது அருளப்ப தந்தையோ புன்முறுவலுடன், கண்சாடையால் அவர்களை அமைதியுறச் செய்தார்.

புறத்தோற்றம் முடிந்தது. ஒரே நிலையில் அமர்ந்திருந்த தந்தை களைப்புற்றவராகக் காணப்பட்டார். சிறிது ஓய்வெடுக்குமாறு ஓவியர் கூறினார். ஒரு சிறந்த சித்திரகாரரின் கருமத்தைக் குழப்ப நாம் விரும்பவில்லை. தயவுசெய்து தொடரும்என எளிதான பிரான்சியமொழியில் பதிலளித்தார் பாப்பு.

முகத்தோற்றத்திற் கிசைய வர்ணங்களைக் கலக்கத் தொடங்கினர் ஓவியர். பரிசுத்த தந்தையின் உதடுகளது இயற்கை நிறத்தையறிவதற்காக அவற்றை நாவினல் நனைத்து ஈரமாக்கும்படி தமக்குத் தெரிந்த பிரான்சியமொழியில் கூறமுயன்றார். மீண்டும்தோல்வியடைந்தார். ஆகவே, தமது நாவினல் உதடுகளை நனைத்துக் காட்டி அவ்விதம்செய்யும்படி சைகைகாட்டினர். அருளப்ப தந்தையோ இவரின் சைகையை விளங்காதவராய்த் தம்மைக் களிப்புறச்செய்யும்படி தமாஷாக ஏதோ காட்டுகிறாரென எண்ணிக் குறுநகைபுரிந்தார். பின்னர், மொழிபெயர்ப்பாளர் வந்து கருமத்தை விளக்கியபோது அங்கிருந்தோரிடம் தமது அறியாமையை எடுத்துக் கூறிக் கெக்கட்டமிட்டுச் சிரித்தார் அருளப்ப பாப்பரசர்.

குறிப்பு: இவை அமெரிக்கா, யுனிவேர்ஸ், கதலிக்டைஜஸ்ட், டைம், நியூஸ்வீக், கதலிக் பிக்ரோறியல் என்ற சஞ்சிகைகளில் வெளிவந்த அருளப்ப பாப்பரசர்பற்றிய கட்டுரையிலிருந்து திரட்டப்பட்டவை.

**ஆசிரியர் ச. பெனடிற்க்**

### புதிய ஓர் தேவஸ்துதி

"பீடத்தின்மிகவும் பரிசுத்த தேவதிரவிய அனுமானத்தில் யேசுநாதர் ஸ்துதிக்கப்படுவாராக" என்ற தேவஸ்துதிக்குப் பின், பின்வரும் தேவஸ்துதி சேர்க்கப்படவேண்டுமென்று திருச்சடங்குகளின் பரிசுத்தசங்கம் பரிசுத்த பாப்பரசரின் அங்கீகாரத்துடன் கட்டளை விதித்துள்ளது.

**"அவருடைய விலைமதிக்கப்படாத திருஇரத்தம் ஸ்துதிக்கப்படுவதாக"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருதினால் அகாஜியானியன் அவர்களுக்குப் பௌத்த பர்மா அளித்த குதூகல வரவேற்பு

## கிறிஸ்துநாதருடைய விலைமதிக்கப்படாத திருஇரத்தத்தின் பிரார்த்தனை

பரிசுத்த 23-ம் அருளப்ப பாப்பரசரால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்டது )

சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்
பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சருவேசுரா
— எங்கள்பேரில் இரக்கமாயிரும் சுவாமி
உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சருவேசுரா — எங்கள்பேரில்...
இஸ்பிரீத்துச் சாந்துவாகிய சருவேசுரா — எங்கள்பேரில் ...
அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சருவேசுரா — எங்கள் ...
நித்தியபிதாவின் சுதனாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே
— எங்களை இரட்சித்தருளும்
மனுவுரு எடுத்த தேவவார்த்தையானவராகிய கிறிஸ்துவின் திவ்விய
இரத்தமே — எங்களை இரட்சித்தருளும்
புதிய நித்திய ஏற்பாட்டின் இரத்தமாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே
— எங்களை இரட்சித்தருளும்
பூங்காவனத்தில் அவஸ்தைப்பட்டபொழுது நிலத்தில் சிந்தப்பட்ட
கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே — எங்களை இரட்சித்துக்.
சாட்டைகளால் அடிபட்டபோது ஏராளமாய்ச் சிந்தப்பட்ட
கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே — எங்களை ...
முண்முடி சூட்டப்பட்டபோது வடிந்தோடிய கிறிஸ்துவின் திவ்விய
இரத்தமே — எங்களை ...
சிலுவைமரத்தில் சொரியப்பட்ட கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே
— எங்களை ...
எங்கள் இரட்சணியத்தின் கிரயமாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே
— எங்களை ...
பாவமன்னிப்புக்கு இன்றியமையாததான கிறிஸ்துவின் திவ்விய
இரத்தமே — எங்களை ...
ஆத்துமங்களுக்குப் புத்துயிரூட்டும் போசனமும் நற்கருணைப் பானமு
மாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே — எங்களை ...
இரக்கத்தின் பெருக்கமாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே—எங்களை ...
பசாசுகளின்மேல் வெற்றிகொண்ட கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே
— எங்களை ...
வேதசாட்சிகளுடைய ஓர்மமாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே
— எங்களை ...
ஸ்துதியருடைய பலமாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே — எங்களை ...
கன்னியர்களின் பிறப்பிடமாகிய கிறிஸ்துவின் திவ்வியஇரத்தமே — எங் ...
ஆபத்திலுள்ளவர்களின் சகாயமாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே
வருந்திச் சுமை சுமக்கிறவர்களின் இளைப்பாற்றியாகிய கிறிஸ்துவின்
திவ்விய இரத்தமே — எங்களை ...
துயரப்படுவோரின் தேற்றரவாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே
— எங்களை ...
மனஸ்தாபப்படும் பாவியின் நம்பிக்கையாகிய கிறிஸ்துவின் திவ்விய
இரத்தமே — எங்களை ...
மரிக்கிறவர்களின் ஆறுதலாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே — எங் ...
இருதயங்களின் சமாதானமும், உருக்கமுமாகிய கிறிஸ்துவின் திவ்விய
இரத்தமே — எங்களை ...
நித்திய சீவியத்தின் அடைமானமாகிய கிறிஸ்துவின் திவ்விய இரத்தமே
— எங்களை ...
ஆத்துமாக்களை உத்தரிப்புஸ்தலத்திலிருந்து விடுதலையாக்கும் கிறிஸ்துவின்
திவ்விய இரத்தமே — எங்களை ...
மகிமைக்கும் மேன்மைக்கும் பாத்திரமாயுள்ள கிறிஸ்துவின் திவ்விய
இரத்தமே — எங்களை ...
உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சருவேசுரனுடைய செம்மறிப்
புருவையாகிய யேசுவே — எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சருவேசுரனுடைய செம்மறிப்புருவை
யாகிய யேசுவே — எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி.
உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சருவேசுரனுடைய செம்மறிப்புருவை
யாகிய யேசுவே — எங்கள்பேரில் இரக்கமாயிரும் சுவாமி.
முதல்வர்: உம்முடைய இரத்தத்தினால் எங்களை இரட்சித்தருளினீர்.
துணைவர்: எங்களை எங்கள் தேவனுக்கு ஓர் இராச்சியமாக்கியருளினீர்.

### பிரார்த்திப்போமாக

சர்வ வல்லப நித்தியரான சருவேசுரா! தேவரீர் உமது ஏக திருக்குமாரனை உலக இரட்சகராக நியமித்தருளி, அவருடைய திரு இரத்தத்தினால் சாந்தியடையச் சித்தங்கொண்டீரே. எங்கள் ஈடேற்றத்தின் இக்கிரயத்தை நாங்கள் தக்கவிதமாய் வணங்கவும், அதன் வல்லபத்தால் இவ்வுலக சீவியத்தின் பொல்லாப்புக்களில் நின்று காப்பாற்றப்பட்டு, அதன் பலனைப் பரலோகத்தில் என்றென்றைக்கும் அனுபவிக்கவும் அனுக்கிரகம் பண்ணியருள வேண்டுமென்று தேவரீரைக் கெஞ்சிமன்றாடுகின்றோம். இந்த மன்றாட்டை எங்கள் ஆண்டவராகிய அதே கிறிஸ்துநாதர் மூலமாய் ஏற்றுத் தந்தருளும் — ஆமென்யேசு.

[ஒவ்வொரு முறைக்கும் 7 வருடப் பலன்; ஒரு மாதம் முழுவதிலும் சொன்னால் பரிபூரண பலன்.]

## கத்தோலிக்கருடைய உரிமைகள் பாதுகாக்கப்படும்

— பிரதமர் ஊனு

கருதினால் அகாஜியானியன் ஆண்டவர்அவர்கள் சமீபத்தில் பர்மாவுக்குச் சென்றிருந்தபோது அவருக்குப் பர்மா அரசாங்கத்தினால் மகத்தானதோர் வரவேற்பளிக்கப்பட்டது. றங்கூன் பத்திரிகைச் செய்திப்படி **பர்மாப் பிரதமர் ஊனு அவர்களே முன்னின்று இக்குதூகல வரவேற்பை நடாத்திவைத்தார்** என்று அறியப்படுகிறது. கருதினால் அகாஜியானியன் ஆண்டவர்அவர்கள் கடந்த புரட்டாசிமாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.

பர்மாதேசம் கருதினால் ஆண்டவர் அவர்களுக்கு அளித்த குதூகல வரவேற்பினால் கத்தோலிக்க பிரசைகளை எத்துணைக் கண்ணியமாய் மதித்துவருகின்றதென்பதைத் துலாம்பரமாகக் காட்டியுள்ளது. இம்முறைக்கும் இலங்கைஅரசாங்கம் பின்பற்றிய முறைக்குமிடையில் பாரதூரமான வித்தியாசமுண்டென்பது கண்கூடு.

**பர்மாப் பிரதம மந்திரி அவர்களால் கருதினால் ஆண்டவர்அவர்களுக்கு ஒரு பகிரங்க விருந்துமளிக்கப்பட்டது.** இச்சம்பவம் இலங்கைஅவதானிகளைப் பெரிதும் கவர்ந்துள்ளது. அவ்விருந்தின்போது பௌத்தர்களுக்கும், கத்தோலிக்கர்களுக்குமிடையேயுள்ள நேசபான்மையைக் கருதினால் ஆண்டவரவர்கள் குறிப்பிட்டார். பர்மியப் பிரதமர் தமது உரையில் "ஐக்கிய பர்மாவில் பௌத்தசமயமே விரைவில் நாட்டின் தேசிய சமயமாக்கப்படும். எனினும் கத்தோலிக்கரோ அன்றேல் மற்றமதத்தினரோ தங்கள் சமய உரிமைகளைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை. **அவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படும்**" என்று அங்கிருந்தவர்களுக்கு வாக்குறுதியளித்தார். மேலும் கத்தோலிக்கர் கல்வித்துறையிலும், சமூகத்துறையிலும் நாட்டிற்குஆற்றிய சேவைகளை அவர் பாராட்டினார்.

கருதினால் ஆண்டவரவர்களை உத்தியோக பூர்வமாகச் சமயவிவகாரமந்திரியும், பிரதமரின் ஆலோசகரும், வெளிவிவகார நிரந்தர காரியதரிசியும், மற்றும் உத்தியோகத்தரும் வரவேற்றனர்.

கருதினால்ஆண்டவரும், அதிமேற்றிராணியாரும், இன்னும்பல விருந்தினரும் பர்மிய ஜனாதிபதியின் மாளிகைக்குச் சென்றனர். அங்கு உத்தியோக பூர்வமான குறிப்புப்புத்தகத்தில் கருதினால்ஆண்டவர் கைச்சாத்திட்டார்.

றங்கூன் தேவாலயத்தில் கருதினால் ஆண்டவரால் நிறைவேற்றப்பட்ட திவ்விய பூசையில், **பிரதமர் ஊனுவும், சமய விவகார மந்திரியவர்களும், மற்றும் பல அரசாங்க உத்தியோகத்தரும் சமுகமாயிருந்தனர்.** இன்னும் பெரியபிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, யப்பான், பிலிப்பைன்ஸ், ஜேர்மனி, இந்தோனேசியா முதலாம் நாடுகளின் இராசாங்கப் பிரதிநிதிகளும் சமுகமளித்தனர்.

திவ்வியபூசையின்பின்னர் கருதினால் ஆண்டவரவர்கள் பிரதமர் அவர்களை அவரதுஇல்லத்தில் தரிசித்தார். சமய விவகாரமந்திரி திரு. உபா சௌவையும் உத்தியோக பூர்வமாகத் தரிசித்துப் பேசினார்.

### மார்கழி 2-ந்திகதி ஒருசந்தி நாள்

இலங்கையில் அனுசரிக்கப் படவேண்டிய ஒருசந்தி நாட்கள்

விபூதித் திருநாளும், பெரிய வெள்ளிக்கிழமையும், தேவமாதாவின் அமலோற்பவ திருநாளின் ஆயத்ததினத்திற்கு முன்வரும் வெள்ளிக்கிழமையும், கர்த்தர் பிறந்ததிருநாளின் ஆயத்ததினத்திற்கு முன்வரும் வெள்ளிக்கிழமையுமாம்.

அமலோற்பவ மாதாவுடைய திருநாளின் ஆயத்ததினம் இவ்வருடம் புதன்கிழமை வருவதால் அதற்குமுந்திய வெள்ளிக்கிழமையாகிய 2-த்திகதி ஒருசந்தி நாளாகும்.

## கத்தோலிக்க உலகிலே........

### கத்தோலிக்க பாடசாலைகள்

இவ்வருடத்தில் 45 புதியபாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் பிலிப்பைனிலுள்ள கத்தோலிக்கபாடசாலைகளின்தொகை 650 ஆக உயர்ந்துள்ளது. பிலிப்பையினில் 3,25,000-த்துக்கதிகமான பையன்கள் கத்தோலிக்க பாடசாலைகளில் பயிற்சிபெற்று வருகின்றனர்.

### ஒருபெரிய வெகுமதி

புதியகினியாவில் வந். பெர்னடோ சிவிங் குரவரவர்கள் கோர்காமேற்றிராசன ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டபோது இளம் ஜேர்மானிய விசுவாசப்பரப்புதற் கழகத்தினர் ஆண்டவரவர்கட்கு ஒரு ஆகாய விமானத்தை அன்பளிப்புச்செய்தனர். இவ்விமானம் 7,700 சதுரமைல் விஸ்தீரணமுள்ள தம் மேற்றிராசனத்தைக் கண்காணிக்க ஆண்டவரவர்கட்குஉதவும். இம்மேற்றிராசனத்தில் 16குருமாரும், 11கன்னியருமே தொண்டாற்றி வருகின்றனர்.

### கலைஞர்களின் தியாகம்

பிரசித்திபெற்ற இருஅமெரிக்க கலைஞர்கள் வேதப்பரப்புதல் அலுவல்களில் தங்கள் உழைப்புமுழுவதையும் செலவிடுவதற்காக இதுகாறும் தாம்நடாத்திவந்த லட்சக்கணக்கான ரூபாய் வருமானமுள்ள கலைத்தொண்டைக் கைவிட்டுள்ளனர். இருபத்தைந்து வயதான பிரபலபாடகரும், நடிகருமான டிக் மிச்சர்என்பவரும், பிரபல நடன நட்சத்திரமும் அவரது மனைவியுமான கறோலினாவுமே அவ்விருகலைஞர்களாகும்.

### புதிய வானொலி

மணிலாநகரில் கத்தோலிக்க நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கெனப் புதிய வானொலி நிலையமொன்றை மணிலாவின் கருதினாலாண்டவரவர்கள் நிறுவியுள்ளார். இவ்வானொலி பரப்புநிலையம் ஆசியாமுழுவதிலும் கிரகிக்கக்கூடிய சக்திவாய்ந்த ஒலிபரப்புச் சாதனங்களைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



பாலர்பக்கத் தொடர்கதை

## தயாள உள்ளம்

உச்சிவெய்யில் தலையைப் பிளந்துகொண்டிருந்தது.

"ஐயா! தர்மம்! பிச்சைபோடுங்க சாமி!" தன்வறண்ட தொண்டையைப்பிளந்து வருவார் போவாரை எல்லாம் வரவேற்று வழியனுப்பிக்கொண்டிருந்தார் அந்தக்கிழட்டுப் பிச்சைக்காரர் (பிச்சைக்காரன் என்றாலும் வயதில் முதிர்ந்தவராகையால் மரியாதையாகவே அழைப்போம்). எத்தனையோகாலமாக ஈரம் கண்டறியாத அவரது பரட்டைத்தலைமயிர் காயவிட்ட தென்னந்தும்புபோல் காற்றிலே அசைந்தது. கண்களில் ஒளியேகிடையாது. கன்னம்சுருங்கிக் கண்கள்குழிவிழுந்து கிடந்தன. உட்காரக்கூடச் சக்தியற்றுக்கூனிக்குறுகிக் கிடந்தார் கிழவர்.

"ஐயா! ஐயா! என்று அலறிய அவரதுவறட்டுக்குரலுக்குக் காற்றைத்தவிர வேறுயாருமே கவனம் செலுத்தவில்லை. "கவலைப்படாதே! கடவுள் அருள்வார்!" என்று கூறுவதுபோல் அந்தக்கிழவரைத் தட்டித்தேற்றியது தென்றல் ஒன்றுதான்! "டாங்! டாங்!......"

குழிவிழுந்து கிடந்தகண்கள் சட்டெனமலர்ந்தன. ஒட்டி உலர்ந்துகிடந்த அவரதுஉதடுகள் சூரியனின் கதிர்பட்டு விரியும் தாமரை இதழ்களாக மலர்ந்து மென்னகைசெய்தன. இதையெல்லாம் நோக்குங்கால் அவருக்கும், அந்தமணியோசைக்கும் ஏதோதொடர்பு இருக்க வேண்டும் என்றல்லவா தோன்றுகின்றது.

ஆம்; இருக்கத்தான் வேண்டும்! இதுவரை கிறுக்கல்விழுந்த பழைய இசைத்தட்டுப்போல் கரகரத்துக்கொண்டிருந்த அவரதுதொண்டைகூட ஓய்ந்துவிட்டதே! ஏதோ ஒரு புதுமகிழ்வு ஏற்பட்டதுபோலல்லவா முகம்தோன்றுகின்றது.

கிழவர் பம்பாய்மிட்டாய்போன்ற தனதுவெள்ளித்தாடியை மெலிந்த கரங்களால் ஒருமுறை தடவிவிட்டார். அவரது விழிகளிரண்டும் சாலையைக் கூர்ந்துநோக்கின. சில நிமிடங்களில்.

அவிழ்த்துவிட்ட ஆட்டுமந்தையைப்போல் ஓரேகூச்சலும், கும்மாளமுமாய்ச் சாலைமுழுவதையும் மறைத்துக்கொண்டு விரைந்துசென்றது மாணவர்கூட்டம். அரட்டையடித்துக்கொண்டு, கண்டுங்காணாததுபோல் செல்லும் அந்தக்கும்பலில் எதைத்தேடியதோ கிழவனின் கண்கள்! எலிக்காகக் காத்திருக்கும் பூனைபோல் அந்தக்கும்பலையே கூர்ந்துநோக்கிக் கொண்டிருந்தன மின்மினிப்பூச்சிபோன்ற அந்த ஒளிமங்கிய கண்கள்.

கூட்டங்கூட்டமாகப் போவதொழிந்து ஓரிருவர் தனித்தனியே வந்துகொண்டிருந்தனர். எதையோ தேடக்கிடைக்காது ஏமாறிப்போயிருந்த கிழவரின்கண்கள் மலர்ந்தன.

"தாத்தா!" அன்புபொங்கிவழிய அழைத்துக்கொண்டு ஓடிவந்தான் ஒருபத்துவயதுச்சிறுவன். "இன்றைக்கு ஒருதொகை! உன்பாடு யோகம்!" கையிலிருந்த காகிதப் பொட்டணத்தை நீட்டினான். "ஆ! அதற்குமுன் ஒருசந்தோஷசெய்தி!" நீட்டியதை மீண்டும் பின்னுக்கிழுத்துக் கொண்டான்.

"என்னடேவிட் அப்படி?" தோலுக்குமேல் எலும்புமுட்டிக்கொண்டுதெரியும் மெலிந்தகரங்களை ஏமாற்றத்துடன் பின்னுக்கிழுத்துக் கொண்டார் கிழவர்.

"தாத்தா, நான் நாலாம்வகுப்பு பாஸ்பண்ணிவிட்டேன்; நான்தான் வகுப்பிலேயே முதல்பையன்." அன்புபொங்கித்ததும்பும் அவன் குரலில் அளவிலாஆனந்தமும் கலந்தொலித்தது.

"என்றும் இதேபோல் முன்னேற இறைவன்உனக்கு அருள்புரிவான் டேவிட்!" கிழவனின் உலர்ந்துபோன உதடுகள் உதிர்த்த இச்சொற்கள் தேன்போல் இனித்தது டேவிட்டுக்கு! கிழவரின்கரங்களை இறுகப் பற்றிக்கொண்டான்.

"இன்னும் எத்தனைநாள் இருக்கிறது விடுமுறைக்கு?" கிழவர் தன் சொந்தப்பேரனிடம் காட்டும்வாஞ்சையுடன் கேட்டார்.

(தொடரும்)

பள்ளிக்கூடங்களுக்காகத்

## தேவபாலனுக்குச் செபம்

தேவபாலகனே, எங்கள் அன்பானயேசுவே! தேவரீருடைய பாலத்துவத்தைப் பார்த்து, எங்கள் கத்தோலிக்க பாடசாலைகளுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்திலிருந்து அவைகளைத் தற்காத்துக்கொள்ளும். நீர் தேவாதிதேவனாய் இருந்தும் நீசமனுவுரு எடுத்து இவ்வுலகில்வந்து உமது பாலப்பருவத்தில் உம்முடைய திருத்தாயாருக்கும், அர்ச். சூசையப்பருக்கும் கீழ்ப்படிந்துநடந்து உம்முடைய மழலைச்சொற்களினாலும், பிள்ளைகளுக்குரிய நேசபாசத்தினாலும் அவர்களைப் பலமுறை ஆனந்திக்கச் செய்தீரே. உம்முடைய குழந்தைப்பருவத்தில் உம்மோடு கூடிவிளையாடிச் சல்லாபித்த எத்தனையோ சிறுபாலியர்களுக்கு முன்மாதிரிகையாகவும், அவர்களின் நல்லொழுக்கத்திற்கு வழிகாட்டியாகவும் இருந்தீரே. எங்களுக்கும் எங்கள் முன்னோருக்கும் கத்தோலிக்க பாடசாலைகளிலேயே பரிசுத்தவேதம் படிப்பிக்கப்பட்டதுபோல் எங்கள் குழந்தைகளுக்கும், பின்வரும் சந்ததிகளுக்கும் அப்பாடசாலைகளிலே குருக்கள், கன்னியாஸ்திரிகள் மூலமாக வேதஅறிவு ஊட்டப்படத் தக்கதாக எங்கள் பாடசாலைகளைச் சகல தீங்குகளில் நின்று பாதுகாத்துக்கொள்ளும்.

திவ்விய பாலகயேசுவே! எங்கள் பாலர்களின் வேதவிசுவாசத்திற்கும், நல்லொழுக்கத்திற்கும் இடையூறாய் இருக்கும் கட்டுப்பாடுகள் நீங்கும்படியும், கத்தோலிக்க பாடசாலைகளில் எங்களுக்கிருக்கும் சுதந்திரம் பறிபோகாமல் இருக்கும்படியும் எங்கள் பரமபிதா சித்தம் இரங்கும்படி உம்முடைய பாலத்துவத்தைக் குறித்து இரந்து மன்றாடுகிறோம் ஆமென்யேசு.

## எங்களிலே அரசாங்கத்துக்கு இரக்கசிந்தை இல்லையா?



நாளை வியாழக்கிழமை கோடரிவைக்கப் படவிருப்பது எதிர்காலப்பிரசைகளாகிய இப்படிப்பட்ட சிறுர்கள்மீதுதான். இவர்களின் எதிர்கால வாழ்க்கை எத்தகையதாயிருக்குமோ!

கல்லுகள் எழுந்து

## சாட்சியம் சொல்லும்

('தங்கத்திலே ...' என்ற மெட்டு)

வானத்திலே ஒளி மறைந்து விட்டாலும்
வாழ்க்கை இருள்வதுண்டோ — எங்கள்
ஞானத்தின் பாட சாலைகள் மறைந்தால்
நாட்டில் ஒளிவருமோ?

●

கல்லுகள் எழுந்து சாட்சியம் சொல்லும்
கவலையின் நிறைவினிலே — தொண்டர்
அல்லும் பகலுமாய்ச் சிந்திய வேர்வை
அழிந்து போவதுண்டோ?

●

கல்வியும் ஞானக் கலைகளும் ஊட்டிக்
கனிவுடன் வளர்த்தவலைக் — கள்வர்
மெல்லவே வந்து தொண்டையை நெரித்தால்
விட்டு விலகுவதோ?

●

மாதவத் தாலே பெற்றிட்ட அருமை
மக்களும் வாடுவதா — நாம்
ஓதரும் ஞானப் பாலருந் தாமல்
உலர்ந்து சோருவதா?

●

மாணிக்கத் தீவின் வளர்ச்சிக்கு நீரை
வார்த்து வரவல்லையா — துன்பக்
கேணியில் வாடக் கேள்வி யில்லாமல்
ஊரைப் பிடியினமோ?

— 'அமுது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கள்,

இது வெறும் பேச்சல்ல!

# பரிசுகளும் மலிவு விலைகளும்

உங்கள் அபிமான புடவை வர்த்தக நிலையமான

## சாறி எம்போறியம்

உங்களுடைய நத்தார்ப் பண்டிகைச் செலவைச் சிக்கனப்படுத்த உதவிபுரிகிருர்கள்.

அத்துடன்

கவர்ச்சிகரமான 10 பரிசுகளையும் உங்களுக்குத் தருகிருர்கள்.

எங்கள் மகத்தான நத்தார்ப் பண்டிகை மலிவு விற்பனையில்

**[28-11-60—24-12-60]**

ரூபா 30/-பெறுமதியான கொள்முதல் செய்யும் ஒவ்வொருவருக்கும்
இந்தப் பரிசுகளைப் பெறச் சந்தர்ப்பம் உண்டு.

பரிசுகள் :

1-ம் பரிசு கவர்ச்சியான கண்ணுடிமேசை (தேக்கு)
2-ம் பரிசு மணிப்புரி (சுத்தப்பட்டு) சேலை
(சருகை வேலைபோட்டது)
3-ம் பரிசு பெற்ருேமாக்ஸ் லாம்பு
4-ம் பரிசு மண்ணெண்ணை அடுப்பு
5-ம் பரிசு ‘டெக்ரன்’ சூட் துணி
6-ம் பரிசு எலெக்றிக் மேசை லாம்பு
7-ம் பரிசு மின்சார சூட்டடுப்பு (Hot Plate)
8-ம் பரிசு தைத்த ‘டெக்ரன்’ நீளக்கால் சட்டை
9-ம் பரிசு டயா சேட்
10-ம் பரிசு 6 கைக்குட்டைகள் (பெண்களுக்கு)

நிபந்தனைகள் : 1. எங்கள் நத்தார்ப் பண்டிகை மலிவு விற்பனை காலத்தில் வாங்கும் ரூபா 30/- பெறுமதியான கொள்முதல் ஒவ்வொன்றுக்கும் எங்கள் பரிசுக் கூப்பன்கள் கிடைக்கும்.
2. அதற்குமேல் ஒவ்வொரு ரூபா 25/- பெறுமதியான கொள்முதலுக்கும் மேலும் ஒரு பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

இத்துடன்

பெண்களுக்கு :

75 சின்னுலம் பட்டு சேலைகள் [ரூபா 16-50க்கு உட்பட்டவை]
50 ஜோஜட் ஒயில்பெயின்ற் சேலைகள் ரூபா 9-50
50 பெம்பேக் ,, ,, ரூபா 6-50
300 கைத்தறி நூல் சேலைகள் [ரூபா 9-55—ரூபா 15 உட்பட]
சேலைகள் ரூபா 33-50

ஆண்களுக்கு :

1000க்கு மேற்பட்ட (இறக்குமதி செய்த) டெக்ரன் ‘லோங்ஸ்’ ரூபா 14-50
300க்கு மேற்பட்ட இந்தியன் ரசூர் ‘லோங்ஸ்’ ரூபா 9-00
200க்கு மேற்பட்ட அரைக்காற் சட்டைகள்
நீலம், காக்கி, வெள்ளை (பள்ளிக்கூடப் பாவனைக்கு உகந்தவை) ரூபா 4-50

விற்று முடிக்க வேண்டியிருக்கிறது

அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு

எமது ஸ்தாபனத்தில் 24-12-60 சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு அதிஷ்டச்சீட்டிழுத்துப் பரிசுகள் வழங்கப்படும்.

காலைப்போக்காது வேளைக்கே உங்கள் நத்தார்ப் புடவைகளை வாங்கி எமது பரிசுத் திட்டத்தில் கலந்து கொள்ளுங்கள்.

## சாறி எம்போறியம்,

124, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 418

தந்தி : “சாறீஸ்”

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2720

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி
நல்லதம்பி தம்பிப்பிள்ளை
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், பாஷையூர்
இல. 10, இரண்டாம் குருக்குத்தெரு
1. கி. யோ. இராசேந்திரமும்,
2. பெண் அஞ்சலீனுவும்.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2720-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1961-ம்ஆ தைமீ 12-ந்உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1120-ம், இன்னும் ரூபா 700-க்கு 25-2-59 தொடக்கம், 4-8-59 வரையும் 100-க்குப் 12% வட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 202 82 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளிக் கோயிற்பற்று, சுண்டிக்குளிஇறை “ஏகன்தறை” ப. நி. இ. 1.ம். செய்பயிர் வான்பயிர்களும். இந்தப் ப. நி. இ. ஒன்றுக்கும் எல்லை: கிழக்கு—பொன்னுபரணம் என்ற மறு நாமம்கொண்ட பறுணுந்துவின் ஆதனம். வடக்கு — கபிரியேல் செல்லக்குட்டிக்கும், பெண் சின்னப்பிள்ளைக்குமுரிய ஆதனம். மேற்கு—றேட்டு. தெற்கு—இறப்பியேல் முத்திராசாவின் ஆதனம். இதடங்கலில் சொரியலாய் ஆறேமுக்கால் ($6\frac{3}{4}$) குளியும், வீட்டில் மேற்கு அறையும், புதிதாகக் கட்டப்பட்ட கடையும், கற்கூசும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனர்.

நம். 35, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 29-11-60

### நன்றி நவில் ஸ்தோத்திரம்

தேவானுக்கிரகத்தாலும், அர்ச். செபமாலைமாதா, அர்ச். அன்னம்மாள், அர்ச். திரேசம்மாள், கோடியற்புதரான அர்ச். அந்தோனியார் முதலாம் அர்ச்சியசிட்டர்களின் வேண்டுதலாலும் என்னுடைய வேலைக்கு ஏற்பட்ட அபாயத்திலிருந்து காப்பாற்றப்பட்டதற்காக இந்தநன்றியறிதல் அறிக்கையை அர்ப்பணிக்கின்றேன்.

தேவதாயாரிலும், சகல அர்ச்சியசிட்டர்களிலும் விசுவாசமும் பத்தியும் கொண்ட

பொ. தம்பிராசாவும் குடும்பமும்
எட்டியாந்தோட்டைப்பங்கு,

### நன்றி

எமது தாயாரின் மரண அடக்கத்திற்குச் சமுகமளித்து அவவின் ஈமக்கிரிகைகளை நிறைவேற்றிய வண. குருப்பிரசாதிகளுக்கும், மற்றும் சங். கன்னியர்கள், பெருமக்கள், அன்பர்கள் யாவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்ருேம்.

சங். சிஸ். மேரி பெனிக்னு,
சங். சிஸ். மேரி வலன்ரைன்,
ம. வினஸ்,
சங். சிஸ். மேரி டொறத்தி
(சகோதரி.)

அம்பலப்புலம்,
ஊர்காவற்றுறை.

### மரண செய்தி

கரம்பன், கிழக்கு அம்பலப்புலவாசரும், பலராலும் நன்கறியப்பட்டவருமான எஸ். மனுவல்தம்பி அவர்களின் பிரிய பாரியார் மரியைப்பிள்ளை என்பவ கடந்த ஒருமாத காலமாக நோய்வாய்ப்பட்டு எவ்வித சிகிச்சையாலும் குணமுருது, அந்திய தேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்றுச் சென்ற புதன்கிழமை (23-11-60) அதிகாலை 3 மணியளவில் கர்த்தரில் நித்தியநித்திரை ஆனுர். இவ தன் உதரக்கனிகள் மூவருள், மூத்த புதல்விகள் இருவரையும் கடவுளின் திருவூழியத்திற்கு அர்ப்பணித்து, ஒரேயொரு அருமைப் புதல்வனையும், பிரியபத்தாவையும் இவ்வுலகில் தவிக்கவிட்டுப் பிரிந்து சென்ருர். இவவை இழந்து துன்புறும் பத்தா, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளோடு எமது அனுதாபத்தையும் ஒன்றிக்கிறேம்.

R. I. P.

"சோம்பேறித்தனம் என்பது ஒரு மனிதன் தனக்குத்தானே பறித்துக்கொள்ளும் புதைகுழி."

— ஜெரமி ரெயிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கட்டிடங்களில் பெற்றோர் குடியேறினர்

நீர்கொழும்பு, ஜா-எலை, களுத்துறை ராகமை, பையகலை, முகத்துவாரம், வேருவிலை, கந்தானைஆகிய இடங்களிலுள்ள சுமார் 40 பாடசாலைகளில் குழந்தைகளும், பெண்களும் குடிபுகுந்தனர்.

மாணவரும் பெற்றோரும் பாடசாலைகளை அரசினர் எடுப்பதை ஏகமயமாக ஆட்சேபிக்கிறார்கள் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது என்று கத்தோலிக்கப் பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரராகிய வண. பிதா பிலிப் திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

# மிருசுவிலில் நடைபெற்ற எதிர்ப்புக் கூட்டம்

"**கத்தோலிக்க மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பைக்கூட உதாசீனம் செய்துவிட்டு அரசாங்கம் இன்று பாடசாலைகளை எடுக்க முற்படுவது முற்றும் அநீதியான, ஜனநாயகத்திற்கு முரண்பட்ட செயலாகும்.**" இவ்வாறு யாழ்ப்பாணக் கத்தோலிக்க மேற்றிராசன சங்கச்செயலாளர் **திரு. எஸ். லாசறஸ்** அவர்கள் கூறினார்.

மதஸ்தாபன பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை ஆட்சேபித்து மிருசுவில் றோமான் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் ஒரு பெரும்கூட்டம் சென்ற ஞாயிற்றுக் கிழமை (20-11-60) பிற்பகல் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மிருசுவில், உசன், கிளாலி, எழுதுமட்டுவாள், கொடிகாமம் ஆகிய கிராமங்களின் கத்தோலிக்க மக்கள் சமுகமளித்தனர். மிருசுவில் விசாரணைப்பங்கின் கட்டளைக்குரவரான வண. பிதா ஞூலாஸ் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. லாசறஸ் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், "பாடசாலைகளை எடுப்பதன்மூலம் எமது மதம், மொழி, பண்பாடுகள் அனைத்தையும் அரசாங்கம் அழிக்க முன்வந்துள்ளது. எமது உரிமைகள் பறிபோகும் இந்நேரத்தில் கத்தோலிக்க மக்களாகிய நாம் இயலக்கூடியளவு எதிர்க்கவேண்டும்" என்றார்.

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் **திரு. எம். அமிர்தநாயகம்** அவர்கள் பேசுகையில் கூறியதாவது: "தேசியக் கல்வித்திட்டத்தினால் எமது பாடசாலைகளின் தரம் மிகவும் குன்றிப்போவதுடன் பாடசாலைகளில் சிங்களமும் திணிக்கப்படும் என்பதில் ஐயமில்லை" என்று குறிப்பிட்டார்.

**செல்வி எம். ஞானமணி** பேசுகையில், "பாடசாலைகளை எடுத்து நடாத்தப்போகும் திட்டம் மாக்சீயவாதிகளினால் தூண்டப்பட்டது. இத்திட்டம் கத்தோலிக்க சமூகத்தைப் படுகுழியில் வீழ்த்திவிடும்" என்று கூறினார். திரு. பி. எம். அந்தோனிப்பிள்ளையும் பேசினார்.

# ஆசிரியமணிக்கு வரவேற்பு

அகில-இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினால் இவ்வாண்டு ஆசிரியமணிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட வடமேல்மாகாணத் தமிழாசிரியர் சங்கத் தலைவரும், சிலாபம், அர்ச். மரியநாயகி தமிழ் ஆண்பாடசாலை அதிபருமான **சங். சகோதரர் டபிள்யூ. எஸ். போல்பீரிஸ், (எவ். பீ. எம்.)** அவர்களை வரவேற்று உபசரிக்கும் நோக்கமாகக் கடந்த 12-11-60 சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்குப் பழையமாணவர் சங்கத்தினால் மேற்படி பாடசாலைமண்டபத்தில் ஓர்உபசார விழா வெகுகோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

விழாவின்ஆரம்பத்தில் பாடசாலைச் சாரணப்படையினர் அணிவகுப்பு மரியாதைசெய்து, ஆசிரியமணியை வரவேற்றனர். பழையமாணவர் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. எம்.வெஞ்சஸ்லாவுஸ் பெரேராஅவர்கள் பொன்னாடை போர்த்திப் பூமாலைசூட்டிய பின், அவரது சேவைகளைப்பாராட்டி வரவேற்புரை நிகழ்த்தினார். பின்னர், பழையமாணவர் வாழ்த்துக்கீதம் பாடியதும், காரியதரிசி ஆசிரியர்திரு. வீ. எஸ் பிள்ளை அவர்கள் கவிதைகளால் தான் எழுதிய அழகிய சித்திர வேலைப்பாடமைந்த வாழ்த்துப்பத்திரத்தைப் பாடி ஒப்படைத்தார்.

சித்திரக்கலைஞர் சிறில் பெரேராஅவர்களால் வரையப்பட்ட ஆசிரியமணியின் பெரிய திருவுருவப் படத்தைத் தனதிகாரி திரு.எஸ். அந்தோனி பெர்ணேண்டு அவர்கள் உபசாரப் பொருளாக வழங்கினார். தொடர்ந்து அவரின் வாழ்க்கைவரலாறு, குணநலன்கள், சேவைத்திறன் என்பவற்றைப் பாராட்டி, சிலாபம் ஆசனக்கோவில் பங்குக்குருவானவர் சங். பிதா றொபட் பெர்ணேண்டு, ஒற்றைப்பனை, றோ. க. தமிழ்ப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை, ஆசிரியர் டபிள்யூ. வி. இம்மானுவேல் பெரேரா, திரு. ஏ. எஸ். ஏ. சாமி, மாணவன் எட்மன் ஆகியோர் சொற்பொழிவுகளாற்றினர். ஆசிரியமணி சங். டபிள்யூ. எஸ். பெரேரா பீரிஸ் அவர்கள் வரவேற்பளித்தவர்கட்கு நன்றித்துதி கூறிய பின், ஆசிரியர் டபிள்யூ. என். எல். லோவ் அவர்களால் தயாரித்துப்பயிற்றப்பட்ட "**நாஸ்திகன்**" என்ற நாடகம் மேடையில் நடித்துக்காட்டப்பட்டது. காரியதரிசி திரு. வீ. எஸ். பிள்ளை அவர்களின் நன்றியுரையுடனும், சிற்றுண்டி உபசாரணைகளுடனும், தேசியகீதத்துடனும் விழா முடிவெய்தியது.

— நிருபர்.

# வேதகலாபனையை உண்டு ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டமையினால் அவர்களின் கைப்பொம்மையாகி **மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்துவிட்டார்.**

திரு. தகாநாயகா அவர்கள், தொடர்ந்து பேசுகையில், "திருமதி பண்டாரநாயகா அவர்கள் கல்விவிடயமாகக் கல்வி நிபுணர்களையும், அறிஞர்களையும் அழைத்து ஆலோசிப்பதை விடுத்து, பொலிஸ் அதிகாரிகளை அழைத்து ஆலோசனை நடத்தியது வியப்பாக இருக்கிறது. எமது சிறுவர்கள் குருடர்களைப்போல் வீதிகளில் அலைந்து திரியும் நாள் தூரத்திலில்லை" என்றும் குறிப்பிட்டார்.

**வண. சிறி. குணசிரி தேரோ** அவர்கள் பேசியபொழுது, வென்னப்பூவாப்பிரதிநிதியாகிய திரு. கியூ. பெர்ணன்டோ பாராளுமன்றத்தில் பேசுகையில் **பல அபத்தங்களை வேண்டுமென்று கூறியுள்ளார்** என்று குறிப்பிட்டார்.

திரு. நியூற்றன் ஐயமான பேசியபோது, **திரு. கியூ. பெர்ணன்டோ எம். பி. அவர்களைத் தெரிந்தனுப்பிய மக்கள் இன்று அவரை 'யூதாஸ்' என்று அழைப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை** என்றார்.

100 பௌத்த பாடசாலைகளின் முகாமைக்காரரான **வண ஜினரெட்டின தேரோ** அவர்கள் பேசுகையில், "கல்வி மந்திரி அவர்கள் **கத்தோலிக்கருக்கும் பௌத்தர்களுக்குமிடையிலுள்ள நேசபான்மையைக் குலைக்க முயலுவது வருந்தத்தக்கதே.** அன்றியும் இவ்வாறு செய்ய முயலுவது நாட்டின் அமைதிக்கு ஆபத்தாக அமையும்" என்றார்.

'நாத்தாண்டியா, வென்னப்பூவாத் தொகுதிகளின் எம். பி.க்கள் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதை எதிர்க்கவேண்டும். அதுவே அவர்களைத் தெரிவு செய்த மக்களின் விருப்பமாகும். அப்படிச் செய்யாவிடின் தங்கள் பதவிகளை இராஜினமாச் செய்துவிட்டு மீண்டும் இப்பிரச்சனையை முன்வைத்துப் போட்டியிடவேண்டும்" என்னும் தீர்மானம் மக்களின் பலத்த காகோஷத்துடன் **ஏகமனதாக** நிறைவேற்றப்பட்டது.

## செபமாலைத்தின அனுசரிப்பு

மட்டக்களப்பு தாண்டவன்வெளி யோசேவாஸ் கத்தோலிக்க வாலிப சங்கத்தினர் பிரதி சனிக்கிழமையையும் செபமாலைத்தினமாக அனுசரிக்க ஏற்பாடுசெய்துள்ளனர். தேவதாயின் மகிமைக்காகவும், சபையின் அங்கத்தவர் இல்லங்களில் செபமாலைப் பத்தியை அனுசரித்தலுமே இதன் நோக்கமாகும். சபையின் தலைவர் திரு. எஸ். தவராசா அவர்களின் கண்காணிப்பில் முதன் முதலாகச் செல்வன் ஸ்ரான்லி சபாரெட்ணம் அவர்கள் இல்லத்தில் ஆரம்பமானது. இவ்வரிய கைங்கரியத்தில் பொதுநலம் விரும்பும் பலர் சேர்ந்து உற்சாகமூட்டுகின்றனர்.

# நாரந்தனை மக்களின் எதிர்ப்பு

"**நீதி வழங்கப்படுமட்டும் ஜனநாயக முறைகளைக் கையாண்டு போராடியே தீருவோம்.**"

சென்ற ஞாயிறுவாரம் (20-11-60) பிற்பகல் 5 மணிக்கு நாரந்தனை, றோ. க. பாடசாலை மண்டபத்திலே பல சமயத்தோரும் சமுகமளித்திருந்த கூட்டமொன்றில் பின்வரும் இரு தீர்மானங்களும் ஏகமனதாய் ஆமோதிக்கப்பட்டன.

1. மதஸ்தாபன பாடசாலைகளைப் பறிக்கும் நோக்கமாய் அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் அநியாய சட்டமானது பெற்றோரினது உரிமையையும், பிள்ளைகளினது ஒழுக்க முறைக்கேற்ற சூழலையும் பாதிப்பதினால் நாரந்தனை மக்களாகிய நாம் அதை முழுமனதாய் எதிர்க்கிறோம்.

2. மேலும், அச்சட்டமானது பெற்றோரினது மனத்திருப்திக்கும், சமாதானத்திற்கும், பிள்ளைகளினது வேத கல்விக்குரிய சூழலுக்கும் ஏற்ற முறையில் திருத்தி அமைக்கப்படுமட்டும் ஜனநாயகமுறைகளைக் கையாண்டு போராடியே தீருவோம்.

குழுமியிருந்த 1,000-க்கு மேற்பட்டோரும் ஒரேமனதாய்த் தங்களது கைகளைஉயர்த்தி இத்தீர்மானத்தை ஆமோதித்தனர்.

## அடம்பனில் எதிர்ப்புக்கூட்டம்

"நாங்கள் எவ்வளவு வறியவர்களாய் இருந்தபொழுதும் கௌரவ கல்விமந்திரி திரு. மாமூட்டின் ஏமாற்றான உறுதி மொழிகளுக்கு ஏடுபடமாட்டோம்" என்று அடம்பன் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் பெருந்திரளாகக் கூடியிருந்த கத்தோலிக்க மக்களின் கூட்டத்தில் பேசிய திரு. அருளப்பு அவர்கள் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், தேசிய கல்வித்திட்டத்துக்குக் கத்தோலிக்கர் தடையாய் இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றனர். 'இருண்ட கண்டமாகிய' ஆபிரிக்காவில் கல்வி என்னும் தீபத்தை ஏற்றிவைத்தவர்களும், மேற்குநாடுகளில் முன்னணியில் திகழும் சர்வகலாசாலைகளை அமைத்தவர்களுமான கத்தோலிக்க குருமாரைக் கல்வித்திட்டத்துக்குத் தடைகளானவர்கள் என்று குற்றஞ்சாட்டுகிறார்கள். வன்னிக் கிராமங்களிலே கல்விவிருத்தி பற்றி அரசாங்கம் யோசிக்குமுன்னரே, திரு. மாமூட்டின் அவர்கள் பிறக்குமுன்னரே கல்வியில் அக்கறைகொண்டு வன்னிப்பகுதியில் கத்தோலிக்க குருமார் பாடசாலைகளைக்கட்டி, இந்நாட்டின் கல்வியறிவுள்ள பிரஜைகளை ஆக்குவதில் முன்னின்றனர்.

### மன்னார் மாவட்ட
## கத்தோலிக்க ஆசிரியரின் கூட்டம்

"சோதனைமிகுந்த இந்நாட்களில் கத்தோலிக்க ஆசிரியர்களாகிய நாங்கள் முக்கடமைகளைச் சுமந்திருக்கிறோம்" இவ்வாறு மன்னார் மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கக்கூட்டத்தில் பேசிய மேற்படி சங்கத்தின் தலைவரான திரு. பர்ணபாஸ் அவர்கள் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மூவித கடமைகளையும் விளக்கி, முதலில் கிறிஸ்துநாதரின் ஞானச் சரீரத்தின் உறுப்பினர் என்றமட்டில் இருள் சூழ்ந்த இந்நாட்களில் கத்தோலிக்க ஆசிரியராகிய நாம் காத்திரமான இடம் வகிக்கிறோம். இரண்டாவதாக, கத்தோலிக்க பெற்றோர் என்றமட்டில் நமதுபிள்ளைகளுக்கு, கத்தோலிக்கசூழ்நிலையில் கல்விகற்பிக்கக் கடமையுடையவர்களாயிருக்கிறோம். அடுத்ததாக, ஆசிரியர் என்றமுறையில் எங்களிடம் ஒப்படைக்கப்படும் பிள்ளைகளுக்குக் கல்விகற்பிக்கக் கடமை பூண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

அதிவண. ஜி. ரீ. பரலசுந்தரம்சுவாமி அவர்கள் தமது உரையில் மாக்சீயவாதிகளினால் வழிநடத்தப்படும் அரசாங்கத்தின் பிழையான பிரசாரங்களில் ஏமார்ந்துபோகாதபடி அங்கிருந்தவர்களை எச்சரித்தார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 1-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org